



வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET
kalmunainet.com
e paper
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் கார்த்திகை 11 (27.11.2021) இதழ் : 41






# பிரிட்டனில் வெளிவிவகார அமைச்சர் அகமட் பிரபுவுடன் சுமந்திரன் சந்திப்பு

## சிறுபான்மையினர் உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பில் பேச்சுவார்த்தை

**நமது அரசியல் நிருபர்**

அமெரிக்கா கனடா ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு பிரிட்டன் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பிரிட்டிஷ் அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்.

பிரிட்டன் மற்றும் தெற்காசிய, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்குப் பொறுப்பான வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவை சந்தித்த அவர், சுமார் ஒரு மணி நேரம், இலங்கை விவகாரம் மற்றும் அரசியல் நிலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

இதன்போது, வொஷிங்டனில் நடந்த பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் விவரங்களையும் அவர், விலாவாரியாக எடுத்துக் கூறியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் (25) நடந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில், அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு,

02




# 6 முஸ்லிம் எம்பிக்களும் தனித்து ஓர் அணியாக செயல்பட முடிவு

## நசீர் அஹமட் தலைமையில் இயங்குவதற்கு தீர்மானம்

அரசாங்கத்துக்கு ஆதரவாக தொடர்ந்து செயற்பட்டு வருகிற முஸ்லிம் எம். பிகள் 06 பேரும் தனித்து ஓர் அணியாக இயங்க உள்ளனர் என்று தெரிய வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றை சேர்ந்த இந்த எம்பிகளுக்கு எதிராக,இவர்களின் கட்சி தலைமைகள் கடுமையான நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கின்றன.

தலைமைகளின் கண்டிப்பான அறிவுறுத்தல்களை மீறி, பட்ஜெட்டை இவர்கள் ஆதரிப்பது வெளிப்படையான விடயம் ஆகும். மேலும் பட்ஜெட்டுக்கு பின்னரான அமைச்சரவை மாற்றத்தில் இவர்களுக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட உள்ளன என்றும் தெரிகின்றது.

இந்நிலையில்,இவர்கள் கிழக்கு மாகாண

02

## B.1.1.529: வீரியம் - அதி வேகம்

# உருமாறிய வைரஸ் தெ. ஆபிரிக்காவில்

தென்னாபிரிக்காவில் வேகமாக பரவும் தன்மை வாய்ந்த உருமாறிய புதிய வகை கொரோனா வைரஸ் திரிபொன்று கண்டறியப்பட்டிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

B.1.1.529 என வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸிற்கு உலக சுகாதார அமைப்பினால் கிரேக்க எழுத்து (அல்பா, பீட்டா, டெல்டா

02

# குறிஞ்சாக்கேணியில் பாதுகாப்பான படகுச் சேவை



திருகோணமலை – குறிஞ்சாக்கேணி பாலத்திற்கு அருகில் படகு சேவை நடத்தப்படுவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

ஒரே நேரத்தில் 25 பேர் வரை பயணிக்கக் கூடிய வகையில் இந்தப் படகு சேவை முன்னெடுக்கப்படுவதாக கடற்படை அறிவித்துள்ளது.

படகில் ஏறுதல், இறங்குதல் நடவடிக்கைக்காக பாதுகாப்பான தற்காலிக இறங்குதுறையொன்றையும் கடற்படையினர் அமைத்துள்ளனர்.

நேற்று முன்தினம்

02

# தமிழரசுக் கட்சியின் முக்கிய பொறுப்புகளில் மாற்றம்...?

**நமது நிருபர்**

தமிழ் அரசு கட்சியின் முக்கிய பொறுப்புக்களில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட உள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதற்கமைய, தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜாவை தேசியப்பட்டியல் ஊடாக எம்பி ஆக்குவதற்கான முன்முயற்சிகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதற்கான பிரதி உபகாரமாக, தலைவர் பதவியை, மாவை சேனாதிராஜா விட்டுக் கொடுக்கலாம் என பேசப்படுகிறது.

02

# பல்கலைக்கு தெரிவான மாணவர்கள் 5ஆம் திகதி வரை பதிவு செய்யலாம்

2020 க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைகழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் நேற்று (26) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் 05ஆம் திகதி வரை பல்கலைகழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

02

# துறைமுக கிழக்கு முனையத்தை சீனாவுக்கு வழங்க தீர்மானம்

02

படம்: செ. பேரின்பராஜா



பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் நாவலர் சிலை திறந்து வைக்கப்பட்ட போது...

படம்: சினாஸ்




கிட்டங்கியில் வீதியைக் கடக்கும் காட்டாற்று வெள்ளம்

# கல்முனையில் நூறு சிறுகதைகள் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை

**செல்லையா பேரின்பராசா**




கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'கிழக்கின் நூறு சிறு கதைகள்' தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை 28- 11- 2021 ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணிக்கு கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை யின் நல்லதம்பி மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தென் கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியல் அபூபக்கர் றமீஸ் பிரதம விருந்தினராகவும், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ. ஜே. அதிசயராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரை தலைமை யுரை என்பவற்றை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனும், அறிமுக உரை, தொகுப்புரை என்பவற்றை எழுத்தாளர் சிவ வரதரா ஜனும், பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் வெளியீடுகள் பற்றிய கருத்துரை யினை தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் தமிழ்த்துறை தலைவருமான பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலைப் பதிவாளர் மன்சூர் ஏ. காதர் ஆகியோர் நிகழ்த்துவர்.


நன்றியுரையினை இத்திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ. கோணேஸ்வரன் நிகழ்த்துவார்.

# பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு

பால், பால்நிலை, பால்நிலை சார் வன் முறைகள், உளவள ஆலோசனைகள், சமூக வலைத்தளங்கள், தொலைபேசி மற்றும் கணனி பயன்பாட்டினால் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பான விழிப்புணர்வுகள் மற்றும் அவற்றினை குறைப்பதற்கான வழிவகைகள் பெற்றுக்கொடுத்தல் போன்ற தலைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திரு. எஸ். ஜெகராஜன் தலைமையில் மகளிர் அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி ஜெனிதா மோகன் அவர் களின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் திருமதி. எஸ். சிவமகேஸ் வரன் பிரதம முகாமைத்துவ உதவியாளர், உளவள உதவியாளர் ரி. எம்.எம். ஹப்றத், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவி யாளர் அ. ஜெஸ்மிர், முகாமைத்துவ உதவி யாளர் எஸ். சுசிகலா, மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எம்.எஸ். றசீனா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத் தியோகத்தர் திருமதி. டி. ஜாசுகி, பயிலுநர் பட்டதாரி ந. நிஜானந், எஸ். தேவப்பிரியன் போன்றோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.






# புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக எல்.எம்.டி. தர்மசேன

புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயக மாக, எல்.எம்.டி. தர்மசேன நியமிக்கப்பட் டுள்ளார்.

கல்வி அமைச்சின் பாடசாலை பிரிவுக் கான மேலதிக செயலாளராக தர்மசேன கடமையாற்றி வருகிறார்.



இதேவேளை, குறித்த பதவியில் பணியாற்றிய பீ. சனத் பூஜித இன்று (26) ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து குறித்த நியமனம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, எதிர்வரும் புதன்கிழமை (29) முதல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக எல்.எம்.டி. தர்மசேன தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## விளக்கம் இல்லாத குழப்பம்..

விவசாயிகளின் போராட்டம் என்பது அரசின் பசுமை விவசாய கொள்கைக் கும் சேதனப் பசளை பயன்பாட்டுக் கும் எதிரானது அல்ல என்பதை அரசு ஓரளவு உணா்ந்து இருக்கிறது என்பது இப்போது புரிகிறது.

அதற்காக, அரசாங்க உயர் மட்டத் தில் எடுக்கும் தீர்மானங்கள் அடிக்கடி மாற்றப்படுவதும், முன்னுக்குப்பின் முரணான முடிவுகளை எடுப்பதும், விவசாயிகளை பாதிக்கிறது என்பதை யும் அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

மொத்தத்தில், எல்லாமே விளக்கமில் லாத குழப்பத்தினால், ஏற்பட்ட நெருக் கடிதான் என்பதை நாடே இப்போது உணரத் தொடங்கியிருக்கிறது.

## குறிஞ்சாக்கே...

முதல், காலை 7.00 - 8.00 மணி வரையும் பிற்பகல் 12.00 மணி முதல் 2.00 மணி வரையும் இச்சேவை முன்னெடுத்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

## பிரிட்டனில் வெளிவிவகா...

தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளிட்டுள்ளார்.

அந்த பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

''சுமந்திரனை சந்தித்ததில் மகிழ்ச்சி அடை கிறேன். மனித உரிமைகளை பேணுவது, பிரச்சினைகளின் பின்னரான பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் ஆகிவற்றோடு, அனைத்து சிறுப்பான்மையினரதும் உரிமை களை மதிப்பதன் முக்கத்துவம் குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம்'' என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில், நாடாளுமன்ற உறுப் பினர் சாணக்கியனும் கலந்து கலந்து கொண் டார் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## B.1.1.529 வீரியம்; அதி...

என்பது போல்) பெயரிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கண்டறியப்பட்டுள்ள கொவிட் வைரஸ் தொடர்பில், அந்நாட்டு தொற்று நோய் நிறுவனம் உறுதிப்படுத்திய நிலை யில், அந்நாட்டின் சுகாதார அமைச்சர் ஜோ பாஹ்லா அதனை அறிவித்துள்ளார்.

அதிக வீரியமாக தன்னை பெருக்கிக் கொள்ளும் இந்த உருமாறிய கொவிட் வைரஸ் மிக ஆபத்தானது என அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வறிவிப்பைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளிலும் விமான நிலையங்கள் எச்சரிக்கை நிலையை பேணி வருகின்றன.

குறித்த வைரஸ் தொற்று காரணமாக தென்னாபிரிக்காவில் டிசம்பர் அல்லது ஜனவரியில் கொரோனா 4ஆம் அலை தாக் கலாம் என அந்நாட்டு சுகாதார அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கௌடெங் போன்ற மக்கள்தொகை நெருக் கம் மிகுந்த மாகாணங்களில், தொற்றுப் பரவல் அதிகரித்தாலும், அது டெல்டா வைரஸின் பிரிவுதான் என்பதால் அதை கட்டுப்படுத்திவிடலாம் என ஆரம்பத்தில் நாங்கள் நம்பிக்கையோடு இருந்தோம்.

ஆனால், இப்போது உருமாறிய புதிய வகை வைரஸ் பரவுவதை தெளிவாக அடையாளம் கண்டுவிட்டோம். நாம் எதிர்கொள்ளும் கண்ணுக்குப் புலனாகாத எதிரியை முன் கூட்டியே கணிப்பது மிகவும் சிரமம்.

பொருளாதார மையமான கௌடெங் நோக்கி தென் ஆப்பிரிக்காவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர். ஆகையால் அடுத்த சில நாள்களில் நோய்த்தொற்றுப் பரவலின் வீதம் அதிகரிக்க தொடங்கலாம்.

தென் ஆப்பிரிக்க அரசும், கொரோனா கட்டுப்பாட்டு கவுன்சிலும் வார இறுதி நாள்களில் சந்தித்து, உருமாறிய வைரஸின் உட்கூறுகள் குறித்தும், நோய்த்தொற்றுப் பரவல் குறித்தும் ஆலோசனை மேற்கொள் ளும் என்றர் அவர்.

அந்நாட்டின் குவாசுலு நடால் ஆராய்ச்சி மற்றும் வகைப்படுத்துதல் மைய (கேஆர் ஐஎஸ்பி) இயக்குநர் பேராசிரியர் டுலியோ டி ஒலிவெய்ரா கூறுகையில், ''தென்னா பிரிக்காவில் வெகு விரைவிலேயே இந்த வைரஸ் கண்டறியப்பட்டுவிட்டதால், இதன் தோற்றம் தென்னாபிரிக்காதான் என தீர்மா னித்துவிட முடியாது.

கொரோனா வைரஸின் மரபணுவில் 30 க்கும் மேற்பட்ட பிறள்வுகள் காணப்படு கின்றன. ஆனால், ஏற்கெனவே கண்டறியப் பட்ட பிறள்வுகளிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது'' என்றார்.

ஏற்கெனவே கடந்த வாரம் லண்டனின் இம்பீரியல் கல்லூரியை சேர்ந்த நுண்ணியல் நிபுணர் டாம் பீகாக் என்பவர், உருமாறிய புதிய வகை வைரஸ் குறித்து விளக்கமாக ட்விட்டரில் குறிப்பிட்டிருந்தார்.

## துறைமுக கிழக்கு...

கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனை யத்தை சீனாவின் ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரச உயர் மட்டம் தீர்மானித்துள்ளதாக நம்பகமாக அறிய முடிந்தது.

துறைமுகத்தின் மேற்கு முனையம், இந்திய கூட்டு நிறுவனமான அதானிக்கு 700 மில்லி யன் அமெரிக்க டொலர்களுக்கு வழங்கப்பட் டுள்ள நிலையில், அரசு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை யிலான அமைச்சரவைக் கூட்டத்தில் கலந் துரையாடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை சீனாவின் அரச நிறுவன மான 'சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கம்பனி' என்ற நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் பேசப்பட்டது. சீன நிறுவனத் துக்கு கிழக்கு முனையத்தை வழங்குவதாக தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் உள்நாட்டு அதிகாரிகளே கையாளவேண்டுமெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அறியமுடிந்தது.

இதேவேளை, இந்திய – சீன நாடு களுக்கிடையிலான உறவில் நடுநிலை வகிக்க விரும்புவதாக ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய ஜப்பான் நாடு களுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் கைச் சாத்திடப்பட்டது. எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை நிராகரித்தது டன் மேற்கு முனையத்தை வழங்குவதற்கு தீர்மானித்தது.

இந்நிலையிலேயே கிழக்கு முனையத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(நன்றி இணையம்)

## 6 முஸ்லிம் எம்பிக்க...

முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் தனி அணியாக செயற்பட உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேற்படி இரண்டு கட்சிகளையும் சேர்ந்த ஏழு, பாராளுமன்ற உறுப்பினர்களும், கட்சி யில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கட்சி தலைமைகளால் ஏற்கனவே அறிவிக் கப்பட்டு இருந்தன.

அதேநேரம், இவர்கள் மீது, ஒழுக்காற்று விசாரணை நடத்தப் போவதாகவும் முஸ் லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்து இருந்தன.

இதேவேளை, கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை கடிதம் இதுவரை கிடைக்க வில்லை. இதனை சவாலாக எதிர்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## தமிழரசுக் கட்சியின்...

இதற்கான பூர்வாங்க முன்னெடுப்புக்கள் இரகசியமான முறையில் நடைபெற்று வந்தாலும்,

அமெரிக்கா சென்றிருக்கும் சுமந்திரன் எம்பி நாடு திரும்பியதும் இதற்கான முஸ்தீபு கள் மேலும் முன்னெடுக்கப்படலாமென சொல்லப்படுகிறது.

இந்நிலையில், தேசியப் பட்டியல் ஊடாக மாவை சேனாதிராஜா எம்பி ஆக்கப்பட்டால் இப்போது தேசியப் பட்டியல் எம்பியாக இருக்கின்ற கலையரசனின் எம்பி பதவி கேள்விக்குறியாகி விடும்.

## பல்கலைக்கு தெரிவான...

பல்கலைக்கழக நுழைவுக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு அவர்கள் வழங்கியுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு SMS மூல மாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் அனுப் பப்பட்ட தகவல்களுக்கு அமைய, பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் இணையத்தளத்திற்குள் பிரவே சித்து தமக்கான பாடநெறிகளின் கீழ் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள் ளார்.

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.
நிலை இல்லாத பொருள்களை நிலையானவை என்று எண்ணும் அற்ப அறிவு இழிவானது.

# விளக்கம் இல்லாத குழப்பம்

உரம்... உரம்... உரம்...

இந்த நாட்டு அரசியலையே ஆட்டங்காண வைத்திருக்கும் மந்திரக்கோல் தான் உரம்.

எத்தனை போராட்டங்கள் நடந்தாலும் விவசாயிகளின் உரத்துக்கான போராட்டம், அரசியல் ரீதியான முடிவுகளை மாற்றியமைக்க செய்திருக்கிறது.

சேற்றிலே கால் வைத்து நாட்டுக்கு சோறு போடும் விவசாயிகளும், பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் தோட்டத் தொழிலாளர்களும், காய்கறி உற்பத்தியில் ஈடுபடுவோரும், நடத்தும் போராட்டம், அரசியலுக்கு அப்பாற்பட்டது மட்டுமல்ல, நாட்டின் அடிப்படை பொருளாதாரத்திற்கு சவால் விடுக்கும் செயல்பாடாக இருக்கிறது. இரு தரப்பும் ஒருவரை ஒருவர் அரசியல் சாயம் பூசுவதை தவிர்த்து, இப்படித்தான் இதனை நோக்க வேண்டும்.

நமது விவசாயிகள், ஒன்றும் அரசிடம் மானியம் கேட்கவுமில்லை. நிதி உதவியும் கோரவில்லை.

'உரத்தை வழங்குங்கள் உற்பத்தியை தருகிறோம்' என்றுதான் கேட்கிறார்கள். சேதனப் பசளையை, பயன்படுத்த வேண்டும் என்ற உடும்புப் பிடியில் இருக்கிறது அரசு. இரசாயன பசளையை உடனடியாக நிறுத்தினால் விளைச்சலைப் பெற முடியாது என்பது விவசாயிகளின் நடைமுறைப் பிரச்சனை.

அரசாங்கம் கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதில் தவறில்லை. 'பசுமை விவசாயக் கொள்கை' என்பது ஜனாதிபதியின்கனவுத்திட்டம்.தேர்தல்விஞ்ஞாபனத்திலும் ஜனாதிபதி உறுதியாக இதனை குறிப்பிட்டிருக்கிறார்.

இது மிகவும் வரவேற்புக்குரிய கொள்கை மட்டுமல்ல, நாட்டுக்கு மிகவும் அவசியமானதும் கூட. ஆனால், எதுவும் நடைமுறைப்படுத்துவதில் தான் அதன் வெற்றியே தங்கியிருக்கின்றது.

சேதனப் பசளையை நடைமுறைப்படுத்துவதற்கு, இந்த நாட்டில் எவரும் எதிர்ப்பில்லை. இரசாயன உரத்துக்காக்கப் போராடும் விவசாயிகள் கூட, சேதனப் பசளை பாவனையை எதிர்க்கவில்லை. உடனடியாக பயன்படுத்த முடியாது என்பதுதான் அவர்களது பிரச்சனை.

புது விடயம் ஒன்றை அறிமுகப்படுத்தும்போது, கட்டம் கட்டமான செயல்பாடு அவசியம். இரசாயன உர இறக்குமதியை உடனடியாக நிறுத்திவிட்டு, சேதனப் பசளையை பயன்படுத்த வலியுறுத்துவது எவ்வளவு அறிவீனம் என்பதை, அதிகாரிகள் மட்டத்தில் புரிந்து கொண்டதாக தெரியவில்லை. சாதாரண விவசாயி அறிவுரை கூறும் அளவுக்கு, அரச உயர்மட்டம் செயல்திறன் அற்றதாக காட்டிக் கொண்டு இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஜனாதிபதி கொள்கை ரீதியாக எடுக்கின்ற முடிவுகளை, எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகவும் இருக்கின்றது.

சேதனப் பசளைக்கு மண்வளத்தை மாற்றுவது என்பது, குறைந்தது ஒரு வருடமாவது தேவைப்படும் என்று விவசாயிகள் கூறுகின்றார்கள்.அப்படி இல்லை என்கிறது அரசு.

இந்த சந்தேகத்தை போக்கி வைப்பது யார்..? கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால், முதலில் விவசாயிகள் தெளிவுபடுத்தப்பட்டு இருக்க வேண்டும். அப்படி எதுவும் நடக்கவே இல்லை.

மாவட்ட ரீதியாக அல்லது மாகாண ரீதியில் பரீட்சார்த்த செயல் திட்டங்களில் இறங்கிய பின்பு, நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதில் அரசு ஈடுபட்டிருக்கலாம். இப்படி கட்டங்கட்டமாக செய்யாததன் விளைவுகளை நாடு இன்று எதிர்கொள்கிறது.


நாட்டின் கள நிலவரத்தை யதார்த்தத்துடன் புரிந்து கொண்ட ஜனாதிபதி, அதிகாரிகள் மட்டத்தில் சில அறிவுரைகளை வழங்கி இருக்கின்றார்.

விவசாயிகள் தெளிவூட்டப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் அதிகாரிகள் மட்டத்தில் சரியான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பது அவரின் அறிவுறுத்தல் மூலம் தெளிவாகின்றது.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...

# தமிழ்த் தேசியத்தை தகுதி நீக்கி இருக்கும் வொஷிங்டன் பேச்சு!

## 'சிறுபான்மை குழு' என்ற அமெரிக்க சொல்லாடலுக்கு எதிர்ப்பு




கனடாவில் சுமந்திரன் எம் பி, சாணக்கியன் எம்பி ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது. சாணக்கியன் பேசி முடிந்ததும் சுமந்திரன் எம்.பி அமெரிக்க பேச்சு வார்த்தை தொடர்பாகவும் இலங்கையின் அரசியல் நிலை தொடர்பாகவும் நீண்ட விளக்கம் ஒன்றை விலாவாரியாக வழங்கினார்.

கனடிய தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்பாடு செய்த இந்த கூட்டத்தில், கேள்வி நேரமும் ஒதுக்கப்பட்டு இருந்தது. கேள்விகளுக்கு பதிலளிக்க சுமந்திரன் தயாரான போது, திடீரென வந்த ஒரு கூட்டத்தினர், சுமந்திரனுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதோடு, அவரைப் பேசவிடாமல் தொடர்ச்சியாக குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தனர்.

இலங்கையின் அரசியல் நிலையை தெரிந்து கொள்வதற்காக மிகவும் ஆர்வத்தோடு வந்திருந்தவர்கள், கூட்டத்தில் மிகவும் அமைதியாகவே இருந்தார்கள். சுமந்திரனும் அக்குவேறு ஆணிவேறாக அரசியலை எடுத்து வைத்தார்.

அமைதியாக நடந்த இந்த கூட்டத்தில், குழப்பம் விளைவிக்கவே இவர்கள் திட்டமிட்டு வந்துள்ளார்கள் என்பது, நன்றாகவே புரிகிறது.

## நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது அமெரிக்கா

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகளை ஏந்தியவாறு மண்டபத்திற்கு வெளியில் சிலர் கோஷங்களை எழுப்பிக் கொண்டே நின்றனர். மண்டபத்தினுள் நுழைந்தவர்கள், மிக மோசமாக நடந்து கொண்டதோடு வார்த்தை பிரயோகங்களும் கடுமையாகப் பிரயோகித்தனர். இறுதியில், பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் சுமந்திரன் மண்டபத்தில் இருந்து வெளியேறினார்.

**'கடந்த 12 வருடங்களாக என்ன பிடுங்கினீர்கள்'**

**'சுமந்திரன் ஒரு துரோகி'**

**'நீ இனிமேல் கனடாவுக்கு வர வேண்டாம்'**

போன்ற ஏககோஷங்கள் மண்டபத்தினுள் புகுந்த குழப்ப வாதிகளால் அடிக்கடி உச்சரிக்கப்பட்டன.

12 வருடங்களாக என்ன பிடுங்கினீர்கள்? என்று கேட்பவர்கள், இலங்கையிலிருந்து கேட்டால் ஓரளவு ஆரோக்கியமாக இருந்திருக்கும். தாயகத்தில் நிற்க முடியாமல் புலம்பெயர் தேசம் ஒன்றில், வாழ்பவர்கள் நீங்கள். தாயகக் கள நிலவரம் புரியாமல் மக்கள் பிரதிநிதியை பார்த்து இப்படி கேட்பது நல்லது அல்ல.

அதற்காக, சுமந்திரன் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர் என்று நான் கூறவில்லை. புலம்பெயர் தேசம் ஒன்றில், மக்கள் பிரதிநிதி ஒருவர் அவமதிக்கப்படுவதென்பது (ஈழத் தமிழர்களை) எங்களை நாங்களே அவமதிப்பதற்கு சமமாகிவிடும்.

புலம்பெயர் உறவுகளுக்கு கேள்வி கேட்கும் உரிமை தாராளமாக இருக்கிறது. அதற்காக, நாகரீகம் இழந்து வன்முறை கும்பலாக நடந்துகொள்வது என்பது தமிழர்களுக்கு, உலக அரங்கில் இன்னும் இன்னும் தலைகுனிவை ஏற்படுத்தும்.

புலம்பெயர் நாடுகளில் நீங்கள் ஏற்படுத்தும் ஒவ்வொரு செயல்பாடுகளும், தாயகத்தில் வாழும் உறவுகளுக்கு பாதகம் ஏற்படுத்தி விடக்கூடாது.

சுமந்திரனை இலக்கு வைத்த, ஒரு திட்டமிட்ட குழுவின் செயல்பாட்டை வைத்துக்கொண்டு, புலம்பெயர்ந்து வாழும் சகல மக்களையும் நாம் தவறாக புரிந்து கொள்ளவில்லை.

உங்கள் பின்புலமும் ஆதரவும் தாயக உறவுகளுக்கு எப்போதும் பலம்.

அதனை பலவீனமாக்கி விடாதீர்கள்.

### வொஷிங்டனில் பல சுற்றுப் பேச்சு

அமெரிக்காவின் அழைப்பில்தான், இலங்கையிலிருந்து சட்ட நிபுணர் குழு வொஷிங்டன் சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. சட்ட வல்லுநர் கமலேஸ்வரன், சட்ட நிபுணர் திருமதி. நிர்மலா சந்திரஹாசன், ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோர் இந்த குழுவில் அடங்கி இருந்தாலும் சுமந்திரன் மட்டுமே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரே பிரதிநிதி ஆகும். இவர்களோடு புலம்பெயர் நாடுகளின் சார்பில்,மேலும் ஆறு பேர் பேச்சுவார்த்தையில் இணைந்து கொண்டார்கள்.

GTF - உலகத் தமிழர் பேரவையின் சார்பில் கலந்து கொண்ட இவர்கள், கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து பங்கு பற்றியதாக அறிய முடிந்தது. ஏனைய மூவரும் அமெரிக்காவிலிருந்துபங்கேற்றனர்.

தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆராயும் பேச்சுவார்த்தையில், பங்கு கொள்வதற்கு, இந்த ஒன்பது பேரையும் தேர்ந்தெடுத்தவர்கள் யார்?

பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் தமிழர் நலம் சார்ந்து செயல்படும்போது,உலகத் தமிழர் பேரவை மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது எப்படி?



தொடர்ச்சி 07ஆம் பக்கம்...

த. குணராசா

# பேச்சாற்றல் மூலம் சிறந்த சமூகத்தை கட்டி எழுப்புவேன்



**அகில இலங்கை பேச்சுப் போட்டியில் முதலிடம் வென்ற "தமிழகரன் சனா"**

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட போட்டியில், 'தமிழகரன் சனா' முதலாம் இடத்தைப் பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டார். கொழும்பு தாமரை தடாகம் மண்டபத்தில், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த வைபவத்தில் இவருக்கான விருது வழங்கப்பட்டது.**

**அவர், 'கல் முனைநெற்' மின் இதழுடன் மனம் திறந்து பேசுகிறார்.**

**கே உங்களைப் பற்றி கூறுங்கள்?**

அன்பு உறவுகளுக்கு அன்பின் பணிவு. **'என்னை இறைவன் நன்றாக படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே'** என்று என் தாய் தமிழிற்கு அழகிய வசனத்தை சொல்லி சென்ற தாய் தமிழ் மூத்தவர் திருமூலர் பாதம் பணிந்தவனாய்.

என் பெயர் நாகராஜா சனாதன். எனக்கு சில சமுக ஆர்வலர்களால் சூட்டப்பட்ட பெயர் 'தமிழகரன் சனா.'

நான் கல்முனையில் பிறந்து ஆரம்ப கல்வி தொடக்கம் உயர்தரம் வரை கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரியில் படித்தேன். நான் உயர்தரத்தில் கணித பிரிவில் பயின்றிருந்தேன்.

எனக்கு சிறு வயதில் இருந்தே அதிகம் ஆன்மீகத்தில் ஈடுபாடு இருந்தது. அந்த விடயம்தான் என்னை பேச்சு துறைக்குள் கொண்டு வந்தது. என் பாடசாலை சூழலும் என் தாய், தந்தையின் சரியான வழிகாட்டலுமே ஆரம்பத்தில் என்னை சரியான பாதைக்கு செல்ல வழி செய்தது.



**கே நீங்கள் பேச்சுப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தில் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். இது உங்களுக்கு எத்தகைய உணர்வை ஏற்படுத்துகிறது? ஏனைய விருதுகள் தொடர்பாகவும் கூறுங்கள்?**

எனக்கு கலை துறையில் அதிகம் ஈடுபாடு ஆரம்பத்தில் இருந்தே இருந்தது. அதன் காரணமாக இசை அமைப்பாளர் எனும் நாமத்தில் பாஞ்சாலி (ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தின் வரலாற்று பாடல்) தமிழ் இளைஞர் சேனையின் கீதம், தரவை நாயகன் (ஸ்ரீ தரவை சித்தி விநாயகர் ஆலத்தின் புகழ் போற்றும் பாடல்) என மிகப் பெரும் 3 படைப்புகளில் இசை அமைப்பாளராக என் திறமையை வெளிப்படுத்தி, அதன் மூலம் ஆலயங்கள் சார்பாகவும், சமுக அமைப்பு சார்பாகவும் சிறந்த இசை அமைப்பாளர் விருதினை பெற்றிருந்தேன்.

**ஆற்றல்மிகு சந்ததியை உருவாக்குவதே எனது இலக்கு**

என் சிறு வயதில் நான் கல்வி கற்ற பாடசாலையில், வாணி விழா பேச்சு போட்டியில் தொடர்ச்சியாக பல தடவைகள் முதல் இடம் பிடித்து பல விருதுகளும், சிறப்பான வில்லு பாட்டு நிகழ்விற்கான விருதும், விளையாட்டு துறையில் ஒரு விருதும் பெற்றிருந்தேன். இவை அனைத்தும் அந்த ஈசன் துணையினாலே சாத்தியம்.

**கே பேச்சுத் திறமை எவ்வாறு உங்களுக்கு வந்தது? எவ்வாறான சொற்பொழிவுகள் செய்கின்றீர்கள்? ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் நீங்கள் வெளியிட்ட சொற்பொழிவு காணொளிகள் தொடர்பாக கூறுங்கள்?**

உண்மையில், க.பொ.த சாதாரண தரம் நான் எழுத முதல், அதிகளவான பேச்சு போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றாலும், க.பொ.த உயர் தரத்தில் கணித பிரிவை தெரிவு செய்ததனால் என் கலைப் பயணம் இடை நிறுத்தப்பட்டு, பின் நீண்ட நாட்களின் பின் சித்தர்களின் குரல் சிவசங்கர் ஜீ அவர்வளின் தலைமையில் கபில்வத்தை முருகன் யாத்திரை சென்றிருந்தோம். அங்கு திக்கி திக்கி நீண்ட நாட்களின் பின் ஒரு காணொலி ஒன்றை முகநூலில் வெளியிட்டேன். அதனை சித்தர்களின்குரல் முகநூலில் இருந்து பகிர்ந்திருந்தார்கள்.

அதனால் பலர் என் பேச்சினை முகநூலில் முதன் முதலில் பார்த்து பெரும் வரவேற்பினை தந்தார்கள். அதன் தொடர்ச்சியாகவே மீண்டும் என் பேச்சுதுறையை ஆரம்பித்தேன்.

உண்மையில், சிறிய வயதில் என் தந்தை மூலமாக பகவான் ஸ்ரீசத்தியசாயி ஆலயத்தில் ஆரம்பமான என் பேச்சு, பல வெற்றிகளை பார்திருந்தது. பின் உயர்தர கல்வியால் நிறுத்தப்பட்ட என் பேச்சு, சிவசங்கர்ஜீ அவர்களின் யாத்திரை மூலமாக மீண்டும் புத்துயிர் பெற்றது.

**நீங்கள் அருமையான கேள்வி ஒன்றை கேட்டீர்கள். உங்கள் பேச்சின் வடிவம் என்ன?**

ஆம், இந்த கேள்வி அருமை. உண்மையில் இன்று எம் சைவ தமிழை மூட நம்பிகை என கேலி செய்யும் பலரின் கருத்துகளுக்கு பதில் அடி கொடுக்க 'ஆன்மீகமும் அறிவியலும்' எனும் தலைப்பின் கீழ் அதிக தேடல்களை மேற்கொண்டு,அதன் பயனாக பல காணொலிகளை முகநூலிலும் பின் பல ஆலயங்களின் சிறப்பு சொற்பொழிவாக நிகழ்த்தி இருந்தேன். அதன் பின், எம் வரலாற்று சைவதமிழ் ஆலயங்கள், இடங்களின் வரலாறுகளை தேடி அதன் மூலம், சில காணொலிகளை முகநூலில் வெளியிட்டிருந்தேன். இனிவரும் காலங்களிலும் அந்த ஈசன் துணையில் வெளியிட உள்ளேன்.

**கே எதிர்கால திட்டங்கள், எதிர் கொள்ளும் சவால்கள் என்ன?**

எதிர்கால திட்டத்தை ஒரே வார்த்தையில் சொன்னால், சைவம் போற்றி தமிழ் வளர்ப்போம். உண்மையில் சொன்னால் இந்த கொரோனா இடர் காலத்தில், பல்லாயிரம் மக்களுக்கு நிவாரண திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தியிருந்தேன்.

பின் பல இடங்களில் சிலை பிரதிஷ்டைகள், கற்றல் உபகரணங்கள் வழங்கல் என பல சமுக செயற்பாடுகளில் என்னை ஈடுபடுத்தி இருந்தேன். இந்த சமூக செயற்பாட்டையும் கொண்டு, என்



சைவத் தமிழ் தேடல்களையும் கொண்டு சிறந்த ஆற்றல் நிறைந்த, எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதே என் எதிர்கால நோக்கம். அதன் பின் பசுமை போற்றுவோம் எனும் திட்டத்தின் கீழ், ஒரு இலட்சம் மூலிகை மரங்களை எம் சைவத்தமிழ் வழியில் நடுவதே என் நோக்கம் ஆகும். என் உயிர் உள்ளவரை என் சைவத்திற்கும் தமிழிற்கும் என்னால் முடிந்தவரை சேவை ஆற்றி என் பேச்சாற்றல் மூலம் சிறந்த சமுகத்தை கட்டி எழுப்புவேன் என்பதே என் உறுதி மொழி.



நான் விசேடமாக இறைவன், தாய், தந்தை, குரு, இராவணா இளைஞர் கழகம், நண்பர், உறவுகள், நலன் விரும்பிகள், பத்திரிகை உறவுகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை சொல்லி கொள்கிறேன். உண்மையில், என் வளர்ச்சியில் இவர்கள் பங்கு மிக அதிகம் என்பது நூறு வீதம் உண்மை.

ஸ்ரீவாழ்க சைவம்... வளர்க தமிழ்...!

என மனதாற போற்றும் ஒரு தூய சமூகம் படைக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு.

**நேர்காணல்: பு. கேதீஸ்**





# தனித்துவ தலைமைகள் தனிமைப்படுவது, எழுச்சி அரசியலை வீழ்த்தி விடுமா?

தனித்துவ தலைமைகள், தனித்துவிடப்படும் காலங்கள் தோன்றி வருகிறதோ? இன்றைய நிலைமைகள் சிந்திக்கத் தூண்டுவது இதைத்தான். எம்பிக்கள், தலைமைகளுக்கு கட்டுப்பட்ட காலங்கள் கழிந்து, இப்போது தலைமைகளே தனித்துவிடப்படும் நிலைமைகள் தோன்றி வருகின்றன.

பிரதேச அபிலாஷைகள், சில எம்பிக்களின் தனிப்பட்ட விருப்புகள், ஏன், அதிகார ஆசைகளும் இந்தச் சூழல் உருவாகுவதில் தாக்கம் செலுத்துகின்றன. அரசியலமைப்பின் இருபதாவது திருத்தம், இரட்டைப்பிரஜாவுரிமை, பட்ஜட் வாக்களிப்புக்களின் பின்னரே இவை அம்பலமாகி வருகிறது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், பலரது அபிலாஷைகளும், அடையாளங்களும் அழிந்து விடுமென, சில எம்பிக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம்தான் இன்று தலைமைகள் தனிமைப்பட பிரதான காரணம். உரிமை அரசியல் சளைப்படைந்து, சலுகை அரசியல் எழுச்சியடைந்து வரும் நிலையில், முஸ்லிம் எம்பிக்கள் சிலருக்கு இந்தப் பயம் ஏற்படுவதை தவிர்க்கவும் முடியாது. தமிழ்மொழி பேசுவோருக்கான பொதுமை அரசியல், பிரிந்து செல்லத் தொடங்கிய காலங்களிலிருந்து, பிராந்திய நலன்களில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இவர்களுக்கு மட்டுமல்ல, சில தமிழ் எம்பிக்களுக்கும் வந்திருக்கிறது.

ஒருமொழிச் சமூகமாக இருந்து பொதுச் சவால்களை எதிர்கொள்வதில் இல்லாமல்போன ஒற்றுமை மீண்டும் ஏற்படும் வரை, ஆதாயங்களுக்காக அள்ளுண்டு செல்லும் நிலைமைகளைத் தவிர்க்கவும் முடியாது. இதுதான், மிதவாதத் தலைமைகளுக்கு இன்று ஏற்பட்டுள்ள கவலை. எதிர்ப்புக்களை வெளிப்படுத் துவதால், என்ன அரசாங்கத்தையா கவிழ்க்க முடியும்? வாக்களிப்பில் பங்கேற்று வரப்போவதை அள்ளிக் கொள்ளத்தான் இந்த வியூகம் என்கின்றனர் ஆதரவளித்த எம்பிக்கள்.







சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான இந்த அரசை இயன்றவரை எதிர்ப்பதுதான், சர்வதேச மட்டத்தில் இந்த அரசைப் பணிய வைக்க உதவும் என்ற இயங்கு தளத்தில் சிறுபான்மை சமூகங்களின் மிதவாத தலைமைகள் பயணிக்கின்றன.

இதற்கு அவசியப்படுவது கட்சிகளின் கட்டுக்கோப்புக்கள்தான். இதில்தான், சமூகத்தின் எழுச்சி அடையாளப்படுத்தப்படுகிறது. இதற்காகத்தான், 2001இல் சகல தமிழ் கட்சிகளையும் இணைத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தப் பின்புலத்திலேதான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கட்சியின் உதயம் தமிழ்மொழிச் சமூகங்களிடையே சிதைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக ஒரு பார்வையை ஏற்படுத்தியிருப்பதாகவும் ஒரு விமர்சனம் இருப்பது உண்மைதான். ஆனால், இக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர், இந்தப் பார்வை பிழையானது என்பதை நிரூபிக்கும் வகையில் தனது கட்சி அரசியலை முன்னெடுத்திருக்கிறாரா? என்ற வினாக்களுக்கு விடையளிப்பது தமிழ்பேசும் தலைமைகளின் பொறுப்பு.







## தலைவர்கள் சுமந்த வலிகளுக்காக எம்பிக்கள் முள் வேலிகளில் விழ முடியாது

இதற்கான விடைகளில் சில தடுமாற்றங்கள் இருந்தாலும், ஒடுக்கப்படும் சமூகங்கள் என்ற பொது இயங்கு தளத்தில் தமிழ் தலைமைகள் சிலவும், முஸ்லிம் தலைமைகள் சிலவும் இணங்கிப் பயணிப்பது இன்றளவும் ஆரோக்கியமாகவே உள்ளது.

இந்த ஆரோக்கிய அரசியலில், பிராந்திய நலன்களே ஆபத்துக்களை ஏற்படுத்தி வருகின்றன. கிழக்கு இணைந்தால் வடக்கு ஆதிக்கம் வருமா? கல்முனை வடக்கு செயலகம் முஸ்லிம் நிர்வாகத்தை பலவீனப் படுத்துமா? மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மையிலத்தமடு, கெவிளிச்சான்மடு உள்ளிட்ட மேய்ச்சல் தரைகள் மறைமுக அரசியல் சக்திகளால் பறிக்கப்படுகிறதா? வடபுல முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தனித் தமிழ் பெரும்பான்மையை மலினப்படுத்துமா? போன்ற அச்சங்கள்தான், மிதவாத தலைமை களிலுருந்து சில எம்பிக்களை, விலகி நடக்கச் செய்கிறது.

குறிப்பாக, வட - கிழக்கு மாகாணங்களின் பாரிய நில ஆளுகைக்கு நடத்தப்பட்ட உரிமைப் போர், இப்போது குறிதவறி, குறுநிலப் போராக மாறி உள்ளமை தான், இணக்க அரசியலிலிருந்து சிறுபான்மைச் சமூகங்களை விலக்கி வைக்கின்றன. இது பற்றிய தெளிவுகளுக்கு இந்தச் சமூகங்களின் தலை மைகள் அடிமட்ட கலந்துரையாடல்கள், சந்திப்புக்களை நடத்தி ஐயங்களைப் போக்கியிருந்தால், தலைமைகளுக்கு இந்நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

அதாவது, வாழிடங்களுக்குரிய அதிகாரப் பங்கீடுகளுக்கான அவசியம் இம்மக்களிடையே உணர்த்தப்படவில்லை. இதனால், குறுநிலப் போர்களிலும், குறுகிய கொள்கைகளிலும் சில எம்பிக்கள் பிழைப்பு நடத்த வேண்டிய பரிதாபம் ஏற்பட்டிருப்பதாகவே அவதானிகள் கவலைப்படுகின்றனர்.

இது இருவருக்கும் இல்லாவிட்டாலும், தாய்மண்ணை இனவாதிகள் அள்ளிச்செல்லட்டும் என்ற நிலையையே ஏற்படுத்தி உள்ளது.

இரு சமூகங்களின் இணக்க அரசிய லில் தமிழ் தேசியகூட்டமைப்புக்குள்ள பொறுப்பு, உண்மையில், வடகிழக்கு மண்ணில் ஒருமொழித் தேசியத் தின் பலத்தை வெளிக்காட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தக் கட்சி சர்வதேசங்களில் நடாத்தும் கூட்டங்கள், கருத்தரங்குகளில்கூட முஸ்லிம் சமூகமும் ஒரு தேவைக்காக, தேசியத்தை வெளிப்படுத்த நேரிட்டபோதிலும், தமிழ் தேசியத்தின் அடையாளம்தான் என்கிறது.

இந்தக் கருத்தை ஒட்டுமொத்த தமிழர்களும் ஏற்காதிருப்பதை போன்றுதான், முஸ்லிம் சமூகத்துக்குள்ளும் முரண்பாடுகள் இருக்கின்றன.

இரு தரப்பிலும் இது களையப்பட்டால், தமிழ்மொழி, சிறுபான்மையினரின் பெரும்பான்மை பூமி வடகிழக்கு என்ற பொது அடையாளம் சர்வ தேசத்திலும் பலப்பட்டு, நமது நாட்டிலும் நிலைப்படும் என்பதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

இந்த உண்மைகள் உணரப்படும் வரைக்கும், தனித்துவ தலைமைகளுக்கு தர்மசங்கடம்தான். இல்லாவிடின், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட எம்பிக்களின் வெற்றிடத்துக்கு, ஆளுமையுள்ளவர்களை அடையாளப்படுத்தி உரிமை அரசியலுக்கான ஆக்கக்குறைந்தது சோரம்போகாத அரசியலை ஆரம்பிப்பது அவசியம்.

இதுதான், சமூக எழுச்சிக்காக தலைமைகள் போராடுவதை அர்த்தப்படுத்தும். இல்லாவிடின், தலைமைகள் சுமந்த வலிகளுக்காக எம்பிக்கள் முள்வேலிகளில் விழ முடியாது என்ற இந்த எம்பிக்களின் விவாதங்கள் எடுபடவே செய்யும். இவ்வாறு, இவர்கள் விழாதிருப்பது, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் முள்வேலிகளை நீண்ட தூரத்தில் விரிக்கவே செய்யும்.

நிப்ராஸ்

**ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானவர்கள், எனவே ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது திறனை அடைந்து கொள்வதற்கான வெவ்வேறு சூழல், சந்தர்ப்பங்கள் தேவைப்படலாம்.**



# உங்கள் பிள்ளை படிக்க ஆர்வம் இல்லாமல் இருக்கின்றதா?

இன்றைய போட்டி மிக்க உலகில் ஒவ்வொருவரும் தனது நிலையை சிறப்பாக நிலை நாட்டை பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறார்கள்.

அதேபோல், இன்று குழந்தைகளும் ஆளுக்காள் வித்தியாசமான சூழலில் வளர்கிறார்கள். ஒவ்வொரு அம்சத்திலும் சிறப்பாக செயல்பட அவர்கள் மீது தொடர்ந்து அழுத்தம் உள்ளது.

சில குழந்தைகள் இயற்கையாகவே கற்றல் திறனை கொண்டிருக்கலாம். இவ்வாறான குழந்தைகளுக்கு கற்றல் மீது ஆர்வம் இருக்கலாம். ஆனால், சில பிள்ளைகளுக்கு ஆர்வமே இல்லாமல் இருக்கலாம்.

ஆனால், படிப்பில் இவர்களது ஆர்வத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்ற கேள்வி எல்லா பெற்றோர்களிடத்திலும் உண்டு.

ஆரம்ப கல்வி கற்றலானது ஒரு குழந்தையின் முழுமையான வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலான சரியான பழக்க வழக்கங்களும் சமூக ஆசாரங்களும் இந்த ஆரம்ப நிலை கற்றலில் இருந்து உருவாகின்றன. ஆனால், உங்கள் குழந்தை படிக்க விரும்பவில்லை என்றால் என்ன செய்வது?

பெற்றோர்களுக்கு பிள்ளைகள் கற்றலில் ஆர்வம் செலுத்தாதபோது அது கவலையாக மாறாக கூடும். ஆனால், குழந்தையின் விருப்பத்தை அதிகரிக்க அல்லது குழந்தை மற்றும் அவரது கற்றல் திறனை ஊக்குவிக்க என்ன செய்ய வேண்டும்?

### 1. எதிர்பார்ப்புகளுக்கு முன் ஏற்றுக்கொள்ளுதல்

சில பெற்றோர்கள் பிள்ளைகள் மீதான அளவு கடந்த எதிர்பார்ப்புகளை முன்வைக்கின்றார்கள். அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அவர்கள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், செழிப்பாகவும் இருக்க வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகின்றார்கள். ஆனால், உங்கள் எதிர்பார்ப்புகள் உங்கள் குழந்தைக்கு தேவையற்ற சுமையாக செயல்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

அவர் படிப்பில் தேர்ச்சி பெறவில்லை என்றால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள், அவர்களுக்கு ஏற்ற மாற்று வழிகளை அணுகுங்கள். இது உங்கள் பிள்ளையை கடினமாக உழைக்க தூண்டும். அவர்களுடன் உங்கள் வெற்றிக்கான யோசனையை வரையறுத்து, அவர்களுக்குச் சுமையாக இல்லாமல் கற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடையச் செய்யுங்கள்.

### 2. பிள்ளைகளின் நலன்களை கருத்தில் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு தனி நபருக்கும் கல்வி அல்லது கற்றல் பற்றிய யோசனைகள் வேறுபட்டவை, ஆனால், நாங்கள் வழங்கும் கற்றல் ஒப்பீட்டளவில் கடினமானது. அவர்கள் பாடசாலைக்கு செல்கிறார்கள், படிக்கிறார்கள், திட்டமிடப்பட்ட கால அட்டவணையைப் பின்பற்றுகிறார்கள், குறிப்பிட்ட பணிகளைச் செய்கிறார்கள், சில தலைப்புகளைக் கற்றுக்கொள்கிறார்கள் மற்றும் அவர்களின் செயல் திறனின் அடிப்படையில் பதவி உயர்வு பெறுகிறார்கள். உண்மையாக உங்கள் பிள்ளை இதில் பயன் பெறுகிறதா? அவர்களுக்கு இதில் ஆர்வம் உள்ளதா? என்பதை அவர்களிடமே கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

### 3. பிள்ளைகளின் ஆர்வத்தை ஊக்குவிக்கவும்

பிள்ளைகள் எப்போதும் தங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் பற்றி ஆர்வமாக இருப்பார்கள். அவர்களின் ஆர்வத்தை இனம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் பிள்ளைகள் சீரான வெற்றியை அடையலாம்.

பதில்களைத் தாங்களே கண்டுபிடிக்கும் சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்குங்கள். 'ஏன்?' என்று கேட்கும் உங்கள் பிள்ளையின் போக்கைக் கண்டு எரிச்சலடைய வேண்டாம். எப்பொழுதும் பொறுமையுடன் பதில் சொல்லுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் நலன்களைப் பின்பற்ற சுதந்திரம் கொடுங்கள். அவர்களின் சோதனைக் கவலையை பொறுமையாகக் கையாளவும், கோபமான அணுகுமுறையைத் தவிர்க்கவும். இது அவர்களை படிப்பிலிருந்து மேலும் திசை திருப்பும்.

### 4. கல்வி கற்பதை விருப்பமான செயலாக மாற்றுங்கள்.

குழந்தைகள் தங்கள் ஆர்வத்தைத் தேடும் விஷயங்களைப் பின்பற்றுகிறார்கள். உதாரணமாக உங்கள் குழந்தை வரைபடங்கள் அல்லது கார்ட்டூன் படங்களின் உதவியுடன் படிக்க ஆர்வமாக இருந்தால் அதற்கு உதவி செய்யுங்கள். பிள்ளைகளை கல்வியை அனுபவிக்க அனுமதியுங்கள்.

### 5. கவனச்சிதறல்களைக் குறைக்கவும்

தொழில்நுட்ப உலகில் நாங்கள் வாழ்வதால். குழந்தைகள் விரைவில் நிறைய பழக்கங்களை உருவாக்கி கொள்கின்றார்கள், அவர்கள் பெரும்பாலும் இந்த கேஜெட்களுக்கு ஈர்க்கப்படுகிறார்கள். அவர்கள் தொலைபேசி அல்லது டிவி கன்சோல்களில் வீடியோ கேம்களை விளையாட விரும்புகிறார்கள்; அவர்கள் திரைப்படங்களைப் பார்ப்பதையும் இணையத்தில் உலாவுவதையும் விரும்புகிறார்கள். அவர்களின் திரை நேரத்தைக் கண்காணித்து, அத்தகைய பழக்கங்களில் கவனம் செலுத்துங்கள். உங்கள் குழந்தை மொபைல் போன்களில் அதிக நேரம் செலவிடுவதில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கவனச் சிதறல்களைக் குறைத்து படிப்பில் கவனம் செலுத்த உதவுங்கள்.

### 6. நேர்மறையாக இருங்கள்

பலவீனங்களைக் காட்டிலும் உங்கள் குழந்தையின் பலத்தில் கவனம் செலுத்துங்கள். திறன்களை வலியுறுத்தும் நேர்மறையான கற்றல் அணுகுமுறையை ஊக்குவிக்கவும். உங்கள் பிள்ளை ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஆர்வம் காட்டவில்லை என்றால், அவருடைய ஆர்வங்களைத் தேட வேறு வழியைக் கண்டறியவும்.

உதாரணமாக, உங்கள் குழந்தை கணிதத்தில் பலவீனமாக இருந்தால், பாரம்பரிய அணுகுமுறைகளிலிருந்து வேறுபட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றவும்.

இணையத்தில் வீடியோக்களைப் பார்க்கவும் அல்லது விளையாடும் போது அல்லது சாக்லேட் வாங்கும் போது அவர்களுக்குக் கற்பிக்கவும். அதேபோல், உங்கள் குழந்தை மொழி விளம்பரம் எழுதுவதில் ஆர்வமாக இருந்தால், அதைப் பற்றி மேலும் அறிய அவரை ஊக்குவிக்கவும்.

இது முன்னேற்றத்தை ஊக்குவிக்கும், மேலும் உங்கள் குழந்தை தன்னம்பிக்கை உணர்வை வளர்த்துக் கொள்ளும், அது அவரை அறிவின் மற்ற பகுதிகளையும் தேட வழிவகுக்கும்.

### 7. தொழில்முறை உதவியை நாடுவதில் இருந்து வெட்கப்பட வேண்டாம்

நாம் முன்பே கூறியது போல், ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அதற்கேற்ப அவர்களின் தேவைகள் வேறுபடுகின்றன. பள்ளி மற்றும் கல்வியின் மீது வெறுப்பை உணர்வது முற்றிலும் பரவாயில்லை.


சில குழந்தைகள் கற்றல் குறைபாடுகளுடன் போராடுகிறார்கள், அது அவர்களுக்கு விஷயங்களை மிகவும் கடினமாக்குகிறது. உங்கள் குழந்தை சில குறைபாடுகளின் பண்புகளைக் காட்டுவதாக நீங்கள் உணர்ந்தால், கூடிய விரைவில் தொழில்முறை உதவியை நாடவும். கவனக் குறைவு/அதிக செயல்பாடு கோளாறு (ADHD) மற்றும் டிஸ்லெக்ஸியா போன்ற குறைபாடுகள் குழந்தைகளில் பொதுவானவை.

ஆனால், அவை சமாளிக்கக்கூடியவை. உங்கள் பிள்ளைக்கு தேவையான சிகிச்சையைப் பெற்று, அவர்களின் கற்றல் திறன்களை வளர்க்க உதவுங்கள்.



அஸ்னா சுஜிதா பைசால்
PAC குழுமம்

# மூத்த ஊடகர் கானமயிலுக்கு சிரம் தாழ்த்தி கண்ணீர் அஞ்சலிகள்



இலங்கையின் மிக மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் கானமயில் நாதன் யாழ்ப்பாணத்தில் காலமானார் என்ற செய்தி நம்மை கவலை அடையச் செய்திருக்கிறது.

யாழ்ப்பாணம், நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில், கடந்த திங்கட்கிழமை அதிகாலை அவரது உயிர் பிரிந்தது.

முதுமையும் உடல் தளர்வும் காரணமாக உயிரிழந்த இவருக்கு, இறக்கும்போது 79 வயதாகும்.

தமிழ் ஊடகத்துறையில் ஜாம்பவானாக திகழ்ந்த கானமயில் நாதன், ஏராளமான ஊடகவியலாளர்களை உருவாக்கிய பேராசான் என்பது பெருமைக்குரிய விடயம்.

இவரது ஊடகத் திறமையைப் பாராட்டி 2013ஆம் ஆண்டு, பிரான்ஸின் தலைநகர் பாரிஸை தளமாகக் கொண்டியங்கும் எல்லை கடந்த ஊடகவியலாளர்கள் அமைப்பின் உயர் விருது இவருக்கு வழங்கப்பட்டது.

1942 ஆம் ஆண்டு பட்டுக்கோட்டையில் பிறந்தவர், தொழில்நுட்பக் கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்டு, 1960களின் முற்பகுதியில் ஈழநாடு பத்திரிகையில், பயிற்சி உதவி ஆசிரியராக இணைந்தார்.

1960களின் பிற்பகுதியில் கொழும்பில் தினபதி- சிந்தாமணி பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக இருந்த அவர், பின்னர் அந்தப் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர் ஆனார்.

1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தை தொடர்ந்து, கொழும்பு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிய அவர், சொற்ப காலம் வீரகேசரி பத்திரிகையின் அலுவலக பொறுப்பாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், 1985இல் உதயன், சஞ்சீவி பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக பணியாற்றியவர், யுத்த காலத்தில் இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் படுகாயம் அடைந்தார்.

சிகிச்சை பெறுவதற்காகவும் பாதுகாப்பு நிமித்தமும் சுவிட்சர்லாந்தில் மூன்று ஆண்டுகள் தங்கி இருந்த அவர், மீண்டும் நாடு திரும்பி பத்திரிகைத் துறையில் செயல்பட்டார்.

2016ஆம் ஆண்டு இறுதியில் காலைக் கதிர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட சமயம், அதன் ஸ்தாபகராகவும் மற்றும் பிரதம ஆசிரியராகவும் பதவிகளை பொறுப்பேற்று பத்திரிகையை திறம்பட செயல்படுத்தி வந்தார்.

வயது மூப்பு, தளர்வு காரணமாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பணியில் இருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தார்.

சுமார் 60 ஆண்டுகால பத்திரிகை அனுபவம் உள்ள இவர், ஒரு காலத்தில் குறிப்பாக, தமிழர் போராட்ட அமைப்புக்கள் இலங்கை, இந்திய ராணுவ ஆதிக்கத்தின் கீழ் காலத்திலும், பத்திரிகை பணியை தொடர்ந்து மேற்கொண்டிருந்தார்.

செய்திகளில் எப்போதும் நடுநிலைமையை பேணி வந்த அவர், மூத்த அரசியல் தலைவர்களாலும் போராட்ட அமைப்புகளின் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர்.

என்றாலும், சில ஆயுதக்குழுக்கள் இவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து இருந்தன. 2006 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை, வெளியே நடமாட முடியாத அளவுக்கு, இவர் அச்சுறுத்தலுக்கு இலக்கானார்.

இதனால் அவர் உதயன் நாளிதழ் அலுவலகத்திற்கு உள்ளேயே வசித்தார் என்பது வேதனைக்குரிய விடயம்.

**அன்னாரின் மறைவுக்கு கல்முனை நெற் ஊடக வலையமைப்பு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, சிரம்தாழ்த்தி கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது.**

03 பக்கத் தொடர்ச்சி...

# தமிழ்த் தேசியத்தை...

இவ்வாறான, கேள்விகள் சகல தரப்பு மக்களாலும் எழுப்பப்படுகின்றன.

அமெரிக்காவில் வொஷிங்டன் டிசியில் நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்களில், இலங்கையில் இருந்து சென்ற மூன்று சட்ட நிபுணர்களை தவிர, பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட ஏனையவர்கள் யார்? என்றே தெரியவில்லை. தமிழரின் தலைவிதியை தீர்மானிக்கும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட மூவரை தவிர, ஏனைய ஆறு பேரும் யார்? யார்? என்று பெயர் கூட அறிவிக்கப்படவில்லை. எதிலும், வெளிப்படைத்தன்மை வேண்டும் என்பதை உலகத் தமிழர் பேரவை புரிந்து கொள்ளாமலும் இல்லை.

'இந்தியா - அமெரிக்கா இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய கொள்கை ஒன்றை, தயாரிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது குறித்து ஆழமாக அறியவே, இந்த சட்ட நிபுணர் குழு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்' என்று, சுமந்திரன் எம். பி. இதனை வெளிப்படையாக கனடாவிலே கூறியிருக்கிறார்.

அரசியல் தீர்வுக்கான சட்ட நுணுக்கங்கள், தமிழர் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்களை தமிழர் தரப்பு எடுத்துரைத்ததாகத் தெரியவருகிறது.

இதனை அடிப்படையாக வைத்தே, அமெரிக்கா - இந்தியாவின் கூட்டு முயற்சியாக புதிய கொள்கை தயாரிக்கப்பட்டு, முன்வைக்கப்பட உள்ளதாக, இலங்கை சட்ட நிபுணர்களும் உலகத் தமிழர் பேரவை பிற தேவர்களும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தைகளை, அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களம், GCJ என்ற பூகோள குற்றவியல் நீதிக்கான அமைப்பும் உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தை நடந்ததாக அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி இருந்தன.

இந்த இரண்டு அறிக்கைகளும், தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றன. Minority Groups - 'சிறுபான்மை குழு' என்று பதம், இவர்களுடைய அறிக்கையில் பயன்படுத்தப்பட்டிருந்தது, தமிழர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

சிறுபான்மை குழு என்ற சொல்லாடல், தமிழர்களை தேசிய இனம் என்ற நிலையிலிருந்து 'தகுதி நீக்கம்' செய்வதாக இருக்கிறது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

சிறுபான்மை குழு என்பது, சிறுபான்மை தேசிய இனம் என்ற அந்தஸ்தைக் கூட இல்லாமல் செய்திருக்கிறது. அதாவது, சிறுபான்மை குழு ஒன்றுக்கான உரிமை, ஒரு தனி நபருக்கான உரிமையை போன்று இருக்கும். இது அங்கீகரிக்கப்பட்டால், இலங்கையின் தேசிய இனம் என்ற பட்டியலில் இருந்து தமிழினம் நீக்கப்படக் கூடிய வாய்ப்பும் ஏற்படலாம்..

ஆகவே, அமெரிக்காவில் சட்ட நிபுணர்களுடன் நடந்த பேச்சு வார்த்தையும், அதன் பின்பு, வெளியிடப்பட்ட இரண்டு அறிக்கைகளும் அரசியல் ரீதியில் இலங்கை அரசுக்கு ஒரு சாதகமாக இருப்பதாகவே ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சமஷ்டிக் கோரிக்கையைக்கூட முன்வைப்பதற்கு, தகுதியில்லாத ஓர் இனம் என்ற நிலையை, இந்த பேச்சுவார்த்தை உருவாக்கி இருக்கிறது என்பது இன்னும் ஒரு சாராரின் கருத்தாக இருக்கிறது.

இந்த நிலையில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் ஒரு சரியான விளக்கத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும். மக்கள் பிரதிநிதியான சுமந்திரன், நாடு திரும்பியதும் அதை சரியாக செய்வார் என்றே சகல தரப்பினரும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், பேச்சுவார்த்தையில் ஆறு பிரதிநிதிகளுடன் பங்குபற்றிய, உலக தமிழர் பேரவை, இந்த ஆறு பேர் பற்றிய சுய விளக்கங்களை கொடுக்கவில்லை. இந்த விடயத்தில், வெளிப்படைத்தன்மை இல்லாததால் தான் இன்று மக்கள் குழம்பிப் போய் இருக்கிறார்கள்.

பேச்சுவார்த்தை நடத்தி இருப்பது தமிழ் மக்களுக்காக. இதன் சாதக பாதகங்களை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு ஒன்பது பிரதிநிதிகளுக்கும் இருக்கிறது.

## நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது அமெரிக்கா




அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில், சிறுபான்மை குழு என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை, பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட ஒன்பது பிரதிநிதிகளும் நேரடியாக மறுத்துரைத்தார்களா? என்பது தெளிவாகத் தெரியாது.

இதனுடைய தாக்கமும் தாற்பரியமும் தெரியாமல் விட்டார்களா? அல்லது இப்போதைக்கு எதையும் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை என்ற நிலையில் தவித்து விட்டார்களா? இதுவும் நமக்கு தெளிவில்லாமல் தான் இருக்கிறது.

ஆனால், புலம்பெயர் இளையோர் அமைப்பான 'டயஸ்போரா எலயன்ஸ்'- Diaspora Alliance - விடுத்த துணிகரமானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கையால் இன்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது நிலைப்பாட்டில், ஒரு தளர்வு போக்கை காட்டி இருக்கிறது.

வேறு விதமாக இதனைச் சொன்னால், இந்த புலம்பெயர் இளையோர் அமைப்பின் நடவடிக்கையினால், அமெரிக்கா தன்னை சுயவிமர்சனம் செய்து இருப்பதோடு தனது நிலைப்பாட்டையும் மாற்றி, திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

அதாவது, 'சிறுபான்மை குழு' என்ற சொல்லாடலுக்கு பதிலாக, 'தமிழ் மக்கள்' என்ற பதத்தை பயன்படுத்தி இருக்கிறது.

இந்த மாற்றத்தை தொடர்ந்து, அமெரிக்க இராஜாங்க திணைக்களம், ஏற்கனவே வெளியிட்ட டுவிட்டர் செய்தியை திருத்தி, மீண்டும் பிரசுரித்திருக்கிறது.

இந்த நடவடிக்கை, அமெரிக்காவின் அரசியல் நகர்வில், ஓர் ஆரோக்கியமான செயல்பாடாக பார்க்க முடிகின்றது.

உண்மையில், இராஜாங்கத் திணைக்களம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாலும், சிறுபான்மை குழு வென்ற அவர்களது நிலைப்பாடு, உண்மை தோற்றமாக இருந்திருக்கக்கூடும். அமெரிக்காவின் உள் மன ஆழத்தில் இருந்து எழுந்த சொற்பதமாகக் கூட இதனைப் பார்க்கலாம்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அழுத்தங்களையும் எதிர்ப்பு அலைகளையும் சமாளிப்பதற்காக வார்த்தைப் பிரயோகத்தை அமெரிக்கா மாற்றி இருக்கக்கூடும் என்ற சந்தேகம் ஏற்படாமலும் இல்லை.

அமெரிக்கா அழைத்தது, நாங்கள் சென்று பேசினோம் என்ற ஏக வசனத்தை சொல்லிவிட்டு பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டவர்கள் ஒதுங்கிக்கொள்ள முடியாது.

இரண்டு வல்லரசுகளின் நகர்வாக இருப்பதால், தமிழர் தரப்பும் சற்று அவதானத்துடன் தான் நகர்ந்து செல்ல வேண்டும்.

# மட்டக்களப்பில் இருந்து சினிமா துறையில் புதிய புரட்சி

## நாளை கல்முனையிலும் திரையிடப்படுகிறது

**கிழக்கில் புதிய புரட்சியாக 'கலிகாலன்' மட்டக்களப்பில் இருந்து வெளிவருகிறது.**

**கிழக்கில் புதிய பாதையில் பயணிக்கும் வர்த்தக சினிமா இயக்குனர் கோடீஸ்வரன் இயக்கத்தில் டாக்டர் சுகுணன் தயாரிப்பில் வெளிவரவுள்ள இத்திரைப்படம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட திரையரங்குகளில் திரையிடப்படுகிறது.**

**கல்முனை GK சினி மெக்ஸிலும் நாளை 28 ஆம் திகதி திரையிடப்படும் இத் திரைப்படத்துக்கு எல்லோரும் ஆதரவு வழங்குவோம்.**




வயது வேறுபாடின்றி அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஒரு பொழுதுபோக்கு ஊடகம் சினிமா என்று சொன்னால் அது மிகையாகாது. சினிமா என்பது வெறும் பொழுது போக்கு சாதனம் என்பதையும் தாண்டி மக்களை சிந்திக்கவும், சிரிக்கவும் வைக்கும் ஒரு உன்னத கலை வடிவமாகவும் திகழ்கிறது.

சமுதாய முன்னேற்றக் கருத்துகளையும், நல்ல சிந்தனைகளையும் பார்ப்பவர் மத்தியில் விதைப்பதில் சினிமாவின் பங்கு அளப்பரியது. ஒரு சினிமா என்பது ஒரு சமூகத்தின் தனித்துவ அடையாளங்களையும் வாழ்வியல் முறைகளையும் பதிவு செய்து அடுத்த தலைமுறைக்கு கடத்தும் பணியையும் செய்கிறது.

திரைப்படத்தில் வரும் கதாபாத்திரங்களை தாமாக கற்பனை செய்து மகிழ்வதும், தம்மால் நிஜத்தில் செய்யமுடியாமல் போன ஒரு விடயத்தை திரையில் தோன்றும் நாயகன் அல்லது நாயகி செய்வதைப் பார்த்து அவர்களை உண்மையான வீரர்களாகவும் தலைவர்களாகவும் ஏற்றுக்கொள்ள வைக்கும் மாயாஜாலத்தையும் சினிமாக்கள் செய்கின்றன.

என்னதான் சினிமா ஒரு கலை வடிவமாக இருந்தாலும், சினிமா எனச் சொல்லும் போது அங்கு பிரதானமாக தெரிவது வியாபாரமே! இன்று சினிமா என்பது மிகப் பெரிய முதலீட்டுடன் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் உலகளாவிய வியாபாரமாக தோற்றம் பெற்றுள்ளது.

இலங்கையில் – அதிலும் குறிப்பாக தமிழ் திரையுலகில் பெரும் ஆதிக்கம் செலுத்துபவை இந்திய தமிழ் சினிமாக்களே என்பதை எவருமே மறுக்க முடியாது. இலங்கை தமிழ் இரசிகர்களைப் பொறுத்தவரையில் தமது இரசனை என்ற பசிக்கு இந்திய திரைப்படங்கள், தான் தீனி போட்டுக் கொண்டிருக்கின்றன.

VISUAL ART MOVIES

இந்த நிலைக்கு மூலகாரணம் எதுவென தேடிப் பார்ப்போமானால், இறுதியில் சினிமா எனும் வியாபாரம் தான் பிரதானமாக வந்து நிற்கும்.

எமது சினிமா வர்த்தக ரீதியில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளராமல் போனதற்கு இங்கு இடம் பெற்ற அசாதாரன சூழ்நிலைகளே பிரதான காரணம் என்பது ஒரு சிலரின் வாதமாக இருக்கிறது. அது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இருந்தாலும், அது மட்டுமே காரணம் என்று கூறி விட்டு நாம் ஒதுங்கிக் கொள்ள முடியாது. இன்றைய சூழலில் எம்மத்தியில் இருக்கும் பல்வேறு சவால்களைப் புரிந்துகொண்டு அதற்கான மாற்று யுத்திகளை வகுத்து அதனூடாக எமது சினிமாவை வளர்ப்பதே பொருத்தமாக இருக்கும்.


அந்தவகையில் வர்த்த ரீதியிலான சினிமாக்களை தயாரிப்பதற்கு எமக்கு முன் உள்ள பிரதான சவால்களாக நவீன தொழில் நுட்பங்களைப் பெற்றக் கொள்வதும், அதனைக் கையாள்வதற்கான அனுபவமிக்க கலைஞர்களை உருவாக்குவதும், முழு நீளத் திரப்படங்களை உருவாக்க எடுக்கும் நீண்ட காலம், பெரும் பொருட்செலவு என நீண்ட பட்டியல் காணப்படுகிறது.

இவை தவிர இந்தியத் திரைப்படங்களின் பெரும் ஆளுமைக்கு மத்தியில் எமது ஈழத்து திரைப் படங்களை நோக்கியும் இரசிகர்களைத் திருப்புவதும் பெரும் போராட்டமாகவே அமையும். இவற்றிற்கு மத்தியில் எமது திரைப்படங்களை வர்த்தக ரீதியில் வளர்க்கவே முடியாதா? எனும் கேள்விக்கு 'முடியும்' எனும் திடமான நம்பிக்கையில் புதிய முயற்சிகள் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

வர்த்தக சினிமாவை வளர்க்க புதியதொரு கோணத்தில், புதியதொரு யுக்தியாக மட்டக்களப்பில் முழு நீளத் திரைப்படங்களுக்கு பதிலாக அதன் குறுகிய வடிவமாக சுமார் 30 முதல் 45 நிமிடங்களுக்கு இடைப்பட்ட சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு அவை திரையரங்குகளில் வெளியிடப்பட்டு வருவதுடன், ரசிகர்களின் அமோக ஆதரவினையும் பெற்றுவருகின்றது.



முரளிதரன்



கோடீஸ்வரன்

இந்தப் பரீட்சார்த்த முயற்சிக்காக மட்டக்களப்பில் வித்திட்டவர்களாக சமூக ஆர்வலரும், பல்துறைக் கலைஞருமான தயாரிப்பாளர் ப. முரளிதரன் அவர்களும், இயக்குநர் கு. கோடீஸ்வரன் அவர்களும் திகழ்கின்றனர். இவர்களது முயற்சியில் முரளிதரனின் "விசுவல் ஆர்ட் மூவீஸ்" எனும் தயாரிப்பு நிறுவனத்தினூடாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சுமார் 30 நிமிடங்கள் நீளம் கொண்ட 'மாயை மற' எனும் சிறிய திரைப்படம் திரையிடப்பட்டு அமோக வரவேற்பைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து இந்த இருவரின் கூட்டணியில் 'தளராதவன்' எனும் மற்றுமொரு சிறிய திரைப்படம் வெளியிடப்பட்டு, அது முந்தைய சாதனைகளைத் தகர்த்ததுடன் பெருமளவான உள்ளூர், தேசிய மற்றும் சில தென்னிந்திய ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிட வேண்டிய விடயம்.

முழு நீளத் திரைப்படத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக அமைந்திருந்தாலும் குறுகிய நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இந்த சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதால் தயாரிப்பு செலவு குறைக்கப்படுவதுடன், குறுகிய காலத்திற்குள் தொடர்ச்சியாக படங்களை வெளியிட்டு இரசிகர்களின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பது ஒரு தயாரிப்பாளராக ப. முரளிதரன் அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கையாக காணப்படுகிறது. இதனை அவர் பல பேட்டிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் தொடர்ச்சியாக கூறி வருவதுடன் இந்த உத்தியைப் பின்பற்றி பலரும் இவ்வாறான சினிமாக்களை தயாரிக்க முன்வரவேண்டும் என்றும் கோரிவருகின்றார்.

மறுபுறம், மட்டக்களப்பின் பிரபலமான இயக்குநராக அடையாளம் காணப்பட்டுள்ள கு. கோடீஸ்வரன் அவர்களும் திரையரங்கு இரசிகர்களைக் கவரும் விதமான ஜனரஞ்சக சினிமா பாணியில் சிறந்த கதை, திரைக்கதைகளைக் கொண்டு படங்களை இயக்கி வருகின்றார். சிறிய திரைப்படங்களாக இருந்தாலும் அவை தொடர்ச்சியாக வெளியிடப்படும் போது ஏனைய தொழில்துட்பக் கருவிகளின் தரமும், கலைஞர்களின் திறனும் தானாக மேம்படும் எனும் நம்பிக்கையை அவர் கொண்டுள்ளார்.

இவர்களின் இந்த முயற்சி மக்கள் மத்தியில் பெரும் ஆதரவையும், வரவேற்பையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம். நல்ல முயற்சிகளுக்கு எப்பொழுதும் மக்களின் ஆதரவு இருக்கும் என்பதற்கு சான்றாக அவர்களது திரைப்படங்கள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பங்களில் திரையரங்கில் முண்டியடித்த சனக்கூட்டமே சான்று.

மேலும், இந்த முயற்சிக்குக் கிடைத்த ஓர் வெற்றியாக மட்டக்களப்பில் வசித்து வரும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்திய கலாநிதி கு. சுகுணன் அவர்களும் சினிமா தயாரிப்பில் தற்பொழுது ஆர்வம் காட்டுகிறார்.



Dr. சுகுணன்

அவர், "சிப்ஸ் சினிமாஸ்" எனும் தனது தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக 'கலிகாலன்' எனும் சிறிய திரைப்படத்தினை, தற்பொழுது தயாரித்து வருகின்றார். 2021 – கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடப்படவிருக்கும் இத்திரைப்படத்திற்கும் மக்கள் பெரும் வரவேற்பை கொடுத்திருப்பது மட்டக்களப்பில் சினிமா வர்த்தக ரீதியில் வெற்றி பெறுவதற்கான காலம் கனிகின்றது என்றே கூறலாம். மேலும், இதுவரை மட்டக்களப்பு திரையரங்குகளில் மாத்திரம் திரையிடப்பட்டு வந்த இவ்வகையான சிறிய திரைப்படங்கள், 'கலிகாலன்' திரைப்படத்தின் மூலமாக அம்பாறை மாவட்டத்திற்கும் நகர்ந்திருப்பது இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் மற்றுமொரு சான்று என கூறலாம்.

ஒவ்வாரு பெரிய சாதனைகளும் சிறிய முயற்சியிலும், இடைவிடாத உழைப்பிலும் தான் படைக்கப்படுகின்றன. அந்தவகையில் இந்திய சினிமா எனும் பெரும் விருட்சத்தின் அடியில் துளிர்க்கும் எம்மவர் சினிமாவும் ஒரு பெரும் விருட்சமாக வளர வேண்டுமானால் இரசிகர்களின் ஆதரவு எனும் உரமும், இலாபம் எனும் நீரும் அவசியம். தாம் செலவழிக்கும் பணம் திரும்பி வரும் எனும் நம்பிக்கை மிகவும் தூர்ந்து போயிருக்கும் நிலையிலும் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ச்சியாக படம் தயாரிக்க முன்வந்திருக்கும் ப. முரளிதரன், வைத்திய கலாநிதி கு. சுகுணன் போன்றவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அதே வேளை எமது ஈழத்துக் கலைஞர்களின் பாரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான திரைப்படங்களை நாம் ஆர்வத்துடன் சென்று பார்வையிடுவதுடன், எமது கலைஞர்களை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாமல் எமது கலைஞர்களின் திறமைகளை நாம் பாராட்டுவதன் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக சினிமா பாரிய வளர்ச்சி காணும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

அத்தோடு எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியாகவுள்ள 'கலிகாலன்' திரைப்படத்தை திரையரங்குகளில் சென்று பார்வையிடுவதுடன் ரசிகர்கள் தமது ஆதரவை வழங்குவதன் மூலம் மேலும் பல சினிமாக்கள் கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் இருந்து பல திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கும், மட்டக்களப்பு சினிமா வர்த்தக ரீதியில் வளர்ச்சி காண்பதற்கும் சினிமா துறை சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்களின் ஆதரவினையும் மட்டக்களப்பில் இருந்து சினிமாத்துறைக்காக பாரிய பங்காற்றிவரும் கலைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நிலம் பறி போய்விட்டால் அரசியல் தீர்வு கிடையாது!

## கனடாவில் சுமந்திரன் எம்பி விளக்கம்



***தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கனடா கிளை, கனடாவில் ஏற்பாடு செய்த கூட்டத்தில் சுமந்திரன் எம் பி ஆற்றிய உரை. இந்தக் கூட்டத்தில்தான் குழப்ப நிலை ஏற்பட்டது.***

பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரைக்குமான *'P2P'* போராட்டத்தை நடத்தினோம். அதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இறுதி நாளிலே ஏறத்தாழ பத்தாயிரம் பேர் சேரக்கூடியதாக அந்த போராட்டம் நடந்தது. ஆனால், இந்த அரசாங்கத்துக்கு எதிராக இப்படியான போராட்டங்களை நடத்த முடியுமா? முடியாதா? என்று பலர் தளர்ந்திருந்த வேளையிலே, சாணக்கியன் பாராளுமன்றத்தினுள் பிரவேசித்து ஒரு சில மாதங்களுக்குள்ளேயே, மட்டக்களப்பு நகரத்திலே ஒரு போராட்டத்தை நடத்திக் காட்டினார்.

சாணக்கியன் எம்பி, பொலிஸ் தடைகளை உடைத்துச் சென்ற, அந்த சிறிய சிறிய காணொளி துண்டுகளை பார்த்த பிறகுதான், இரண்டாம் நாள் துணிவோடு பலர் வந்து சேர்ந்தார்கள். நாங்கள் நடந்து சென்ற அனைத்து பட்டணங்களிலேயும் மக்களுடைய பேராதரவு, விசேடமாக இஸ்லாமிய மக்கள் கூடுதலாக வாழுகிற பிரதேசங்களிலே, அவர்களது அரசியல் தலைவர்கள் முன்னால் வர முடியாத நிலையிலும் கூட, அந்த மக்கள் திரண்டு வந்து எங்களுக்கு ஆதரவை தெரிவித்தார்கள்.

**சுய நிர்ணயம் பற்றி பேசுவதற்கு நிலம் இருக்க வேண்டும்**

காத்தான்குடி, இஸ்லாமிய சகோதர்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசம். இன்றைக்கு நீங்கள் அவருக்கொரு (சாணக்கிய னுக்கு) மாலை அணிவித்தீர்கள். அன்றைக்கு முழு காத்தான்குடியும் திரண்டுவந்து, எங்களுக்கு மாலைகளை அணிவித்தார்கள். நான் இது பெருமைக்காக சொல்லவில்லை.

கிழக்கிலே இருந்து வடக்கு வரைக்கும் ஒரு எழுச்சியை நாங்கள் காண்பிக்கக் கூடியதாகயிருந்தது. மக்கள் ஆதரவு இருந்தது. அது அந்த வேளையிலே தேவையாகவும் இருந்தது. ஆனால், ஒவ்வொரு நாளும் நாங்கள் அப்படியாக எழுச்சியை காண்பித்துக் கொண்டிருப்பதிலே பிரயோசனமில்லை. நாங்கள் நடைமுறையிலே ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

இன்றைக்கு தெற்கிலே அரசியல்வாதிகள் தலைமை கொடுக்காமலே பாரிய போராட்டங்கள் நடைபெறுகின்றன. வீதியிலே மக்கள் திரண்டு வந்து இந்த அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள்.

ஜே.வி.பி. யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க சொன்னார், 'உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தமிழ் மக்கள் மத்தியில் மட்டும் பிரபலமானவர் அல்ல, முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டும் பிரபலமானவர் அல்ல. இன்றைக்கு தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் ஏதாவது அநீதி நடந்தாலும் கூட அவருக்குத் தான் தொலைபேசி அழைப்பு விடுகிறார்கள். எங்களுக்கு தொலைபேசி அழைப்பு விடுப்பது இல்லை' என்று சொன்னார்.

அப்படியான ஒரு எழுச்சி. அப்படியான ஒரு ஆதரவு எங்களுக்கு தேவையாய் இருக்கிறது. என்ன என்று சொன்னால், இலங்கையிலே ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமானால் அதற்கு அனைத்து மக்களுடைய ஆதரவு ஓரளவுக்காவது இருக்க வேண்டும். மக்கள் மத்தியிலும் ஓரளவுக்காவது ஆதரவு இருக்க வேண்டும். நாங்கள் எல்லாவிதமான அழுத்தங்களையும் கொண்டு வருவோம்.

ஆனால், அமெரிக்கா வரும்படி அழைத்தார்கள். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எங்களை பத்து வருஷத்துக்கு முதல் அழைத்தது. விசேடமாக அமெரிக்கத் தீர்வைப் பற்றிப் பேசுவதற்கு அழைத்தார்கள். சட்டங்களைப் பற்றி அறிய வேண்டும் என்று அழைத்தார்கள். அதனால்தான், சம்பந்தன் ஐயா சட்டத்தரணிகள் குழு ஒன்றை மிகவும் மூத்த சட்டத்தரணிகள் இருவரை என்னோடு அனுப்பினார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒரு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது. இரண்டு நாட்கள் பேச்சு வார்த்தைக்கு பிறகு நான், வாஷிங்டனில் இருக்கிற இந்திய தூதுவரை சந்தித்து அவருக்கு நடந்த விஷயங்களைச் சொல்லி இருக்கிறேன். அதற்குப் பிறகு நடந்த கூட்டங்களை பற்றி நியூயோர்க்கிலே இருக்கிற ஐக்கிய நாடுகளுக்கான இந்திய நிரந்தரத் பிரதிநிதியை சந்தித்து அவருக்கு விளக்கமாக சொல்லியிருக்கிறேன். வருவதற்கு முன்னர் சம்பந்தன் ஐயாவும் நானும் இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்து நீண்ட நேரம் பேசியிருக்கிறோம். இது அரசியலில் தீர்வு சம்பந்தமான விடயம். அரசியல் தீர்வு விடயத்திலே இதுவரைக்கும், எப்படியான தீர்வாக இருக்க வேண்டும் என்பதை சொல்லியிருப்பது இந்தியா ஒன்றுதான்.

ஆகையினாலே, இந்த விடயத்திலே நாங்கள் மிகவும் நிதானமாகவும், கவனமாகவும், உலக வல்லரசும் பிராந்திய வல்லரசும் சேர்ந்து, இயங்குகிற வகையிலேதான் இந்த நகர்வுகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

இது குறித்து எவருக்கும் எந்த விதமான மாற்று சந்தேகங்களும் எழவேண்டியது கிடையாது. ஏன் இதை செய்கிறோம். ஏனென்றால், ஓர் அரசியல் தீர்வு அத்தியாவசியமாக தேவையாயிருக்கிறது. அரசியல் தீர்வு ஒன்று இல்லாவிட்டால், இலங்கையிலேயே நாங்கள் ஒரு மக்களாக வாழ்கின்ற சூழ்நிலை இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ஒரு நிலம் இருக்கிற வரைக்கும் தான் சுயநிர்ணய உரிமையை பற்றி பேச முடியும்.

நிலம் இருக்கிற வரைக்கும் தான், சர்வதேச சட்டத்தில் நாங்கள் ஒரு மக்கள் என்ற அந்தஸ்தை கொண்டிருக்க முடியும். நிலம்பறி போய்க்கொண்டிருக்கிறது. எங்கள் கண் முன்னாலே அந்த நிலம் போய்க்கொண்டிருக்கிறது. 70 வருட காலமாக செய்து முடிக்க முடியாததை ஒரு சில வருடங்களிலேயே செய்து முடிப்போம் என்று இந்த அரசாங்கம் கங்கணம் கட்டியிருக்கிறது. அதனால் தான், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த உடனே முதலாவதாக செய்த விடயம் கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் செயலணி ஒன்றை நியமித்தது.

தொல்லியல் செயலணி ஒன்றை நியமித்ததற்கான ஒரே காரணம், அங்கே பௌத்த தொல்லியல் அமைப்புகள் இருக்கின்றன என்பதை காட்டி, அதனை வைத்து கொண்டு இது பூர்வீகமாக இங்கே தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசம் அல்ல என உறுதிப்படுத்த இருக்கிறார்கள்.

**மூவின மக்களின் ஆதரவு இல்லாமல் அரசியல் தீர்வு சாத்தியமில்லை**

வடக்கு -கிழக்கு இணைப்பு எவ்வளவு அத்தியவசியமான விடயம் என்பது உங்களுக்கு தெரிந்த விடயம். கிழக்கு மாகாணத்திலே ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்தோம். அந்த வழக்கில் இடைக்கால உத்தரவு ஒன்றை பெற்றோம். அந்த இடைக்கால உத்தரவை வைத்து எங்களது விவசாயிகள் விதைப்பதற்கு சென்றார்கள். அறுவடை செய்தார்கள். வழக்கு முடிவதற்கு முன்னதாக தொல்லியல் திணைக்களம் அந்த இடத்தைப் பார்வையிட வேண்டும் என்று கேட்டார்கள். அங்கு எந்த சின்னங்களையும் காணவில்லை. அதை நீதிமன்றத்துக்கு அறிவித்தார்கள். சரி அதிக வெற்றி என்று இருந்த போதும், சென்ற மாதத்தில் அந்த வழக்கிலே ஒரு பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார்கள். இதிலே, தொல்லியல் சம்பந்தமான சின்னங்கள் இல்லாவிட்டாலும், இதை நாங்கள் அரசுடமையாக்க போகிறோமென்று ஒரு பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார்கள். இவற்றை நிறுத்துவது எப்படி?

சாணக்கியன் சொன்ன மேய்ச்சல் தரை நிலம், மட்டக்களப்பு மாவட்டத்திலே நாங்கள் நேரடியாக போய் பார்த்தோம். வழக்கொன்று தாக்குதல் செய்தோம். வழக்கிலே ஒரு உத்தரவாதத்தை கொடுத்தார்கள். பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னதாக இங்கே வந்திருக்கிறவர்கள் அகற்ற படுவார்களென்று உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. அகற்றப்படவில்லை. பிறகு அவர்கள் சென்றார்கள்.ஆனால், திரும்ப அந்த இடத்திலே ஆட்களைக் கொண்டு வந்து குடியேற்ற ஆரம்பித்து விட்டார்கள். எப்படி நிறுத்துவது. ஆயுதம் இருந்தபோது வித்தியாசமான வழிமுறைகள். இப்பொழுது அப்படியல்ல. இப்படியாக நாங்கள் நிறுத்துவது? நாங்கள் அதனை போராடி நிறுத்துவதற்கான எல்லா வழிமுறைகளையும் நாங்கள் செய்கிறோம்.

நிலம் அளவையிட வருகிறபோது மக்கள் சென்று உயிரை பணையம் வைத்து நிறுத்துகிறார்கள். நீதிமன்ற உத்தரவுகளை பெறுகின்றோம். முடிந்த எல்லாவற்றையும் செய்கின்றோம். அரசாங்கத்தோடு பேசுகின்றோம். இதை நீங்கள் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். சர்வதேசத்துக்கு இதை அறிவித்திருக்கின்றோம். நான் வந்த போது இந்த நில அபகரிப்பைப் பற்றி 5 பக்கங்களில் தெளிவாக இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறதை விடயங்களை ஆதாரப்பூர்வமாக அனைத்து அதிகாரிகளிடத்திலேயும் கொடுத்திருக்கிறோம். ஏன் கொடுத்தோம். ஒரு அரசியல் தீர்வு அவசரமாக தேவையாய் இருக்கிறது என்பதனை சுட்டிக் காட்டுவதற்காக அதனை கொடுத்தோம்.

நிலம்பறி போய்விட்டால், அதற்குப் பிறகு அரசியல் தீர்வு கிடையாது. எதுவும் கிடையாது. அந்த நிலத்தைப் பாது காப்பதற்கு எங்களுக்கு எண்ணிக்கை போதாது. பலர் வெளியேறிவிட்டார்கள். இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்? என்று இளைஞர்களிடத்திலே கேட்டால், முதலாவதாக சொல்லுகிற பதில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...

# கூட்டத்தை குழப்பியவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள்?

## கனடியத் தமிழ் கூட்டமைப்பு கடும் கண்டனம்

தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் பரப்புரைக்கு கனடாவில் சுமந்திரன் எம். பியின் பேச்சைக் குழப்பிய ஜனநாயக விரோதிகள் அவல் கொடுத்திருக்கிறார்கள். இதனால், பாதிக்கப்படுபவர்கள் எங்கள் தாயக உறவுகளே.

இவ்வாறு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வே. தங்கவேலு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரொறன்ரோவில் நடாத்திய பொதுக் கூட்டம் சுமுகமாக நடந்தது. ஆனால், இறுதி நேரத்தில் எம். ஏ. சுமந்திரன் பேசிக் கொண்டிருந்த போது, மண்டபத்தின் பின்புறம் நின்று கொண்டிருந்த சிலர், பேச்சைத் தொடர விடாமல் உரத்த குரலில் கூச்சல் போடத் தொடங்கினார்கள்.

கூட்டத்தில் அரை மணித்தியாலம் பேசிய இராசமாணிக்கம் சாணக்கியன் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் பேசி முடித்தார். அவருக்கு பலத்த கைதட்டலும் கிடைத்தது.

அவையோர் எழுத்தில் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படும் என்று பலமுறை சொல்லப்பட்டது. இருந்தும் அவற்றை செவிமடுக்காது தொடர்ந்து சுமந்திரனை பேசவிடாது கூட்டத்தைக் குழப்பினார்கள். இதனால், கூட்டத்தை முடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டோம். இப்படி நடப்பது இதுவே முதல் தடவையாகும்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்னர், சிலர் மண்டபத்திற்கு எதிர்ப்புறமாக புலிக்கொடியுடன் நின்றிருந்தார்கள். கனடா நாட்டில் அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட ஒவ்வொரு குடிமகனிற்கும் உரிமை உண்டு. கனடா ஒரு ஜனநாயக நாடு என்ற முறையில் அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட சட்டம் அனுமதிக்கிறது.

கனேடிய தமிழ்ச் சமூகம் சட்டத்தை மதிக்கின்ற ஒரு சமூகம். இந்த நாட்டில் எல்லோருக்கும் பேச்சுரிமை, கருத்துரிமை நூறு விழுக்காடு இருக்கின்றது. ஆனால், சட்டத்தை மதியாது, சட்டத்தை கையில் எடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை. படித்தவரைப் பிடிக்காத ஒரு சிலரே சட்டத்தை கையில் எடுக்கத் துணிகின்றார்கள்.

இன்றைய பூகோள, அரசியல் சூழலில் தமிழ் மக்களது உரிமைகளை ஜனநாயக வழிமுறையில், பேச்சுக்கள் மூலம் - அமெரிக்கா, இந்தியா போன்ற வெளிநாடுகளின் ஆதரவுடன்தான் பெற முடியும். எங்கள் வழி வன்முறைதான் என்றால், மேற்குல நாடுகள் முன்னர் போல் எம்மை கைவிட்டு விடும்.

இதைத்தான், கூட்டத்தை குழப்பியவர்கள் விரும்புகிறார்களா? எனக் கேட்க விரும்புகின்றோம். அவர்களது ஜனநாயக விரோதச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்களை அவமதித்தது அவர்களுக்கு வாக்களித்த மக்களை அவமதித்ததற்கு ஒப்பானதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகிய இருவரும் எமது தாயக மக்களால், ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள். அந்த மண்ணில் நின்று கொண்டு, அந்த மக்களுக்காக நாடாளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் குரல் கொடுப்பவர்கள்.

குறிப்பாக சுமந்திரன் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளினது இராஜதந்திரிகள், தூதுவர்கள் மற்றும் அதிகாரிகளோடு சம்பந்தன் ஐயாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க எங்கள் மக்களது சிக்கல்கள், குறிப்பாக அரசியல் தீர்வு பற்றி தொடர்ச்சியாக பேசி வருபவர்.

அவரது அமெரிக்க வருகை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்த நாடு விடுத்த அழைப்பின் பேரிலேயே அவரும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக. ஈஸ்வரன் மற்றும் முனைவர் நிர்மலா சந்திரகாசன் வருகை தந்துள்ளார்கள்.

தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் பரப்புரைக்கு, இந்த ஜனநாயக விரோதிகள் இன்று அவல் கொடுக்கின்றார்கள் எனக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். இதனால், பாதிக்கப்படுபவர்கள் எங்கள் தாயக உறவுகளே. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

09ஆம் பக்க தொடர்ச்சி...

## நிலம் பறி போய்...

வெளிநாட்டுக்கு போகப்போகிறோம். எல்லாருமே வெளிநாட்டுக்கு போய் விட்டால், அங்கே தமிழ் தேசமும் கிடையாது. தமிழ் மக்களுக்கு தீர்வும் கிடையாது.

எங்களுடைய மக்கள் தொடர்ச்சியாக அங்கே தலை நிமிர்ந்து நின்று என்றைக்கும் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு எங்கள் இடத்திலேயே மக்கள் கொடுத்திருக்கிறார்கள். வேறொருவரிடத்திலும் அதைக் கொடுக்கவில்லை.

தொடர்ச்சியாக எங்களுடைய கையிலே அந்த பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் செய்வோம், அங்கே எங்களுடைய மக்கள் அந்தப் பொறுப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பினிடத்தில் ஒப்படைத்திருக்கிற வரைக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பு அதனை செய்யும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நானும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட திரு. சாணக்கியன் இந்த விடயங்கள் குறித்து பேச வேண்டும் என்று சொல்லி உங்களுடைய (கனடா) அரசாங்கத்தின் பிரதிநிதி நேரடியாகவே என்னிடத்து கேட்டுக்கொண்டார்.

நீங்கள் அமெரிக்காவுக்கு செல்கிறீர்கள். தயவுசெய்து கனடாவுக்கும் வாருங்கள் என்று கேட்டார். நான் சரி வருகிறேன் என்று சொன்னேன். சாணக்கியனையும் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்றார். இப்போது வந்திருக்கிறேன் என தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்த இடத்திலிருந்தே குழப்ப நிலை ஏற்பட்டு, சுமந்திரன் எம்பி மண்டபத்தில் இருந்து வெளியேறினார்.

# கடாபியின் மகனை நோக்கி துப்பாக்கிச்சூடு: வேட்புமனுவை வாபஸ்பெறுமாறும் அழுத்தம்!

## போர்க்குற்றவாளி எனக்கூறி வேட்பு மனு நிராகரிப்பு

ஒலிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முஹம்மட் கடாபியின் மகன் ஸாபிஅல் இஸ்லாமின், தேர்தல் முயற்சியை குழப்பும் நோக்கில் நேற்று வியாழக்கிழமை அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள ப் பட்டது.

போட்டியிடுவதற்கான வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவந்த வேளையிலே, இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில், எந்தக் காயங்களும் அவருக்கு ஏற்படவில்லை.

லிபியாவில், டிசம்பர் 24 இல், ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதில், போட்டியிடுவதற்கென கடாபியின் மகன் வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தார். எனினும் இவரது வேட்புமனுவை தேர்தல் செயலகம் நிராகரித்துவிட்டது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் தேடப்படும் ஸாபிஅல் இஸ்லாம், தேர்தலில் போட்டியிட முடியாதென தேர்தல் செயலகம் அறிவித்தது. இந்த அறிவிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு கடந்த வியாழக் கிழமை கடாபியின் மகன் நீதிமன்றுக்கு வந்திருந்தார். இவ்வேளையிலே, இவர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில், அவர் மயிரிழையில் உயிர் பிழைத்தார்.

இத்தேர்தலில் போட்டியிட, அந்நாட்டின் சபாநாகர், இராணுவத் தளபதி உள்ளிட்ட பலர் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளனர். இதில் முன்னோடி வேட்பாளராக கடாபியின் மகனே கருதப்பட்டார். இதில், அவர் வெற்றி பெறுவாரென்றும் எதிர்பார்க்கப்பட்டது. இவர், வேட்பு மனுத் தாக்கல் செய்யச்சென்ற வேளையில், சிலரால் தடுத்து நிறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



இந்தப் பின்னணியிலேயே, அவரது வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டதாக ஸாபி அல் இஸ்லாமின் ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு 25 பேரின் வேட்புமனுக்களை லிபிய தேர்தல் தலைமையகம் நிராகரித்திருக்கிறது. இந்நிலைமைகள், அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தலாமென சர்வதேசம் கவலை தெரிவித்துள்ளது.

# கிழக்கின் நூறு சிறுகதைகள் நூல் வெளியீடும் கௌரவிப்பும்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணத்திலுள்ள நூறு சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து நூலுருவாக்கம் செய்து அண்மையில் திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இலக்கியத்துறைக்கு அளப்பெரிய பங்காற்றிவரும் உலக எழுத்தாளர் உமா வரதராஜன் உலக கவிஞர் சோலைக்கிளி (அத்தீக்) ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நகழ்வில் மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் உரையாற்றுவதையும் ஓய்வுநிலை அதிபர் திருமலை நவம் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆகியோர் உள்ளதை படங்களில் காண்க



படங்கள்: செ. பேரின்பராஜா








# நீர்க்குமிழிகளாய் விடை கொடுத்த சிரிப்பொலிகள்

இலங்கையின் அதி நவீனத்துடன் கூடிய கேபிள் மூலம் நிர்மாணிக்கப்பட்ட புதிய களனி பாலம் கடந்த புதனன்று ஜனாதிபதி, பிரதமரினால் திறந்துவைக்கப்பட்டது.

‘கல்யாணி தங்க நுழைவு’ (Golden Gate Kalyani) என்பதுதான் இதன் பெயர். கோடிக்கணக்கான ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த பாலம், கோலாகலமாக திறக்கப்பட்ட அதேநேரம், ஆற்றைக் கடக்க மாற்று வழியில்லாததால், நான்கு மாணவர்கள் உட்பட 6 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.



கிண்ணியா - குறிஞ்சாக்கேணி ஆற்றைக் கடக்க, பாதுகாப்பான எந்த ஏற்பாடும் இல்லாமல் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்களை கையில் வைத்துக் கொண்டே பயணம் செய்கின்றனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாக்கேணியில் பால நிர்மாண பணிகள் இடம்பெற்று வரும் பகுதியில், மோட்டார் பொருத்தப்பட்ட மிதப்புப்பாலம் (படகு பாதை) கடந்த செவ்வாய்க்கிழமை நீரில் மூழ்கி விபத்திற்குள்ளானது.

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொது மக்கள் சிலரை ஏற்றிக் கொண்டு பயணித்த படகு கவிழ்ந்ததில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட சிலர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் முழு இலங்கையரையும் சோகத்தில் ஆழ்த்தியதோடு, இலங்கை அரசியல் பரப்பிலும் பேசுபொருளாக மாறியுள்ளது.

பல்வேறு கனவுகளுடன் பாடசாலைக்கு சென்ற மாணவர்களுடன், தொழிலுக்காவும், தேவை நிமித்தமும் அந்த படகில் பயணித்தவர்களில் ஒரு சிலரின் பயணம் அதன் எல்லையை தொடாமலேயே முடிவுறுத்தப்பட்டது.

சுமார் 23 பேர் பயணித்த மேற்குறித்த மிதவைப் படகில் அப்பிரதேசத்தை சேர்ந்த சகு சஹீ (மூன்றரை வயது), சஹிலா (6 வயது), பரீஸ் பகி (6 வயது), சப்ரியா (30 வயது), ஷேஹப்துல் சாகர், எவ்.சரீன் (8 வயது) ஆகியோர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணித்திருக்கிறார்கள்.

ஏனைய 17 பேரும் படையினர் மற்றும் அப்பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 24 ஆம் திகதியன்று குறித்த சம்பவத்திற்காக மிதவைப் படகின் உரிமையாளர் உட்பட மூன்று பேர் எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மறுநாள் 25 ஆம் திகதி கிண்ணியா நகரபிதா கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கைதுகள் தொடர்கிறது ஆனால் இழக்கப்பட்ட உயிர்களுக்கான இழப்பீடு என்ன?

இன்றைய அக்கறைகளும் அவதானிப்புகளும் அனர்த்தம் ஏற்படு முன் வந்திருந்தால் ஏதுமறியா பிஞ்சுகளில் நீரில்மூழ்கி மூச்சுத் திணறி ஜீரணிக்க முடியாத ஒரு மரணத்தை ஏற்றிருப்பார்களா?

களனியில் அதி நவீன தங்க நுழைவுப்பாலம் ஆனால் இங்கு ஒரு கம்பிப்பாலம் காலாகலத்திற்கு வந்திருந்தால் இந்த மழைக்கால மரணம் சம்பவத்திருக்காதல்லவா ?

இன்று குற்றவாளிகளை அடையாளப்படுத்தும் படலமும் கைதுகளும் அரங்கேற்றப்படுகிறது. ஆனால் இந்த இழப்பிற்கான காரணம் யார்? காலாகாலத்தில் மக்களின் அடிப்படை போக்குவரத்து வசதிகளை சீர் செய்யாத அபிவிருத்தியாளர்களென தம்மை அடையாளம் காட்டும் அரசா? அல்லது அதனை அடையும் வழிகளை துரிதப்படுத்தாத நாடாளுமன்ற உறுப்பினர்களா? இல்லாவிட்டால் தரமற்ற பயணப் படகிற்கு கட்டண அறவீட்டு அலகோடு அனுமதி வழங்கிய நகரசபையா? தரமற்ற சேவையை மக்களுக்கு வழங்கிய படகின் உரிமையாளரா? இல்லாவிட்டால் இன்னமும் தங்கள் நிலை உணராமல் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை தாக்கி கருவிகளை பறித்தெடுத்த மக்கள் கூட்டமா? யாரை குறித்து விரல்நீட்டி பேசப்போகிறோம். விளைவுகள் எம்மை சுற்றி சுற்றியே வந்துகொண்டிருக்கும் என்பது மாத்திரமே நிதர்சனம்.



இந்நிலையில் இப்போது அப்பாவி குழந்தைகளின் உட்பட ஆறுபேரின் உயிர்பறிபோக காரணமான குறித்த ஆற்றை கடக்க 25 ஆம் திகதி முதல் கிழக்கு மாகாண ஆளுனரின் பணிப்புரையின் பெயரில் கடற்படையினரால் இலவச படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது .

குறித்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை பார்வையிட சென்ற கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கிழக்கு மாகாணத்தில் தற்போது செயற்படும் அனைத்து பாலங்களின் தரம் குறித்து ஆராய விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் இவ்வாறான நிகழ்வுகளை அடையாளப்படுத்த உயிர்ப்பலிகள்தான் வழிவகை செய்கிறது போலும் இன்றைய நிகழ்வுகள் நம் முன் தென்படுகின்றன.

கிண்ணியா பிரதேசத்தை பொறுத்தவரை திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிண்ணியாவில்தான் வசித்து வருகிறார்கள். அப்படி இருந்தும், இவ்வாறான ஒரு நிலை இதுவரை நீண்டிருக்கிறதென்றால் பாராளுமன்ற உறுப்பினரின் வாசனையே படாமல் வறண்டு கிடக்கும் தமிழ்கிராமங்களான கட்டைபறிச்சானில் அமைந்துள்ள 30 வருடங்களுக்கு மேற்பட்ட துவாரங்கள் நிரம்பப்பெற்ற பாலம் மற்றும் இலங்கைத்துறை மற்றும் முகத்துவாரம் ஆகிய பிரதேசங்களுக்கிடையில் பயணிக்கும் கயிறுகட்டப்பட்ட மிதவைப்பாலம், கடந்த தேர்தல் காலத்தில் கட்சி அரசியல் போட்டியால் எரியூட்டப்பட்ட புன்னையடி ஆற்றை கடக்கும் பாதைகளின் நிலை என்ன? அங்கும் உயிர்ப்பலிகள் ஆன பின்புதான் அவை கவனத்தில் எடுக்கப்படுமா என்பதே இன்றைய ஆயிரம் டொலர் கேள்வியாக இருக்கிறது.

எது எப்படியோ வெள்ளம் வருமுன் அணை கட்டியிருக்க வேண்டும் ஆனால் வெள்ளம் தலைக்கேறிய பிறகுதான் இங்கு பலருக்கு வெள்ளம் வந்த உணர்வு ஏற்படுகிறது என்பது தான் நமது சமுதாய சூழலின் துர்பாக்கிய நிலையாக இருந்து வருகிறது. என்று தீரும் இந்த அவல நிலை?



விபத்து, உறவுகள் பறிக்கப்பட்ட சோகம், இழப்பின் ஆற்றாமை, விரக்தி இவை எல்லாவற்றையும் கடந்து கள நிலவரத்தின் உண்மைத்தன்மையை நாட்டுக்கு எடுத்துச்சொல்லும் சுயாதீன ஊடகவியலாளர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி அவர்களை தாக்கி அவர்களின் பதிவுக்கருவிகளை பறித்த மிலேச்சத்தனமான செயல் கண்டிக்கப்பட வேண்டியது. குறித்த குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

**பா. பிரியங்கன்**
**(சம்பூர் நிருபர்)**



# நோக்குவர்மம்

## மெய்தீண்டாகலை

ஆதிதமிழரின் பல அரியவகை கலைகளில் மிக தொன்மை வாய்ந்த கலையே இவ் வர்மக்கலை. உடல் வலிமையையும், உள வலிமையையும் பல மடங்கு அதிகரிக்க செய்யும் இக்கலை மருதுவத்தினையும், தற்காப்பினையும் கொண்டது.

இவ் வர்ம கலையின் அதி உச்சமான நிலையே நோக்கு வர்மம் எனும் மெய் தீண்டாகலை.



பார்வையின் வழியே மற்றவர்களை தம் கட்டுபாட்டிற்குள் கொண்டுவரும் முறையே இவ் நோக்கு வர்மத்தின் அதி உச்சமான அபூர்வ ஆற்றல்.

எந்தவொரு பொருளையோ மனிதனையோ தொடாமல் கண் பார்வையால் மட்டுமே மற்றவர்களை இயக்கி அவர்களை தம் கட்டுபாட்டிட்குள் கொண்டு வரும் அற்புத சக்தியே நோக்குவர்மம்.

மன வலிமையின் அதி உச்சமான அமானுஷ்ய முறையே இவ் நோக்குவர்ம கலை ஆன மெய் தீண்டாகலை.

இவ்அபூர்வ கலையின் வரலாறு தான் என்ன? இதன் நோக்கம் தான் என்ன? இது எவ்வாறு சாத்தியம்? இக்கலையில் வளர்ச்சி பாதை என்ன? சற்று கூர்ந்து நோக்குவோம்.

ஆதி தமிழன் கண்டறிந்த பற்பல கலைகளில் பல விஞ்ஞான நுட்பங்கள் இருந்தாலும் அவற்றை எல்லாம் மிஞ்சுகின்ற அதிசயிக்கதக்க அபூர்வகலையே இவ் நோக்குவர்மம்.

ஆதிதமிழராம் அகத்திய மகா முனிவரினால் அருளப்பட்ட இக்கலை ஆரம்பத்தில் நோய்களை தீர்பதற்கான யுக்தியாகவே பயன்படுத்தபட்டது. அகத்திய மகா சித்தரினால் அருளப்பட்ட மருதுவ முறைகளில் அதி நுட்பமான சூக்சும முறையே இவ் நோக்குவர்மம். பார்வையின் வழியே மற்றவர்களின் மனதை தன்வசபடுதும் ஆற்றல்.

தென் இந்தியாவின் பாண்டிய நாட்டின் எல்லை பகுதியான தென் பொதிகை மலை எனும் மேற்கு தொடர்ச்சி மலையில் அகத்திய மகா சித்தர் வாழ்ந்து வந்துள்ளார். இதற்கான ஆதாரம் இன்றும் இவ் மலையில் கல்வெட்டுகளாக உள்ளன. அடர்ந்த வனமான இக் காட்டு பகுதியில் கொடிய விலங்குகளின் நடமாட்டம் இருந்தது இவ் விலங்குகளினை தன் கண் பார்வையினால் அவற்றினை நிலைகுழைய செய்து கட்டுபடுத்துவதற்காகவே இவ் நோக்கு வர்மம் பயன்படுத்தபட்டது.

தவத்தின் வலிமையினால் மனதின் வலிமை பல மடங்காகும். இத் தவ வலிமையின் மூலம் மற்றவர்களின் மனதினை, சிந்தனையினை தன் கட்டுபாட்டிட்குள் கொண்டுவரும் ஆற்றல் பெருகும். இவ்வாறே நோக்கு வர்மம் செயல்படுபதாக தன் ஏட்டு சுவடிகளில் கூறியுள்ளார் மாகா முனிவர் அகத்தியர்.


நோக்குவர்ம கலையின் ஆற்றலை பெற காட்டு பகுதியே சிறந்தது எனவும் சொல்லபட்டிருக்கிறது.

மருத்துவ நன்மைக்காகவே இவ் நோக்குவர்மம் பயன்படுத்தபட வேண்டும் என்பதையும் ஏடுகளின் குறிப்பிட்டு வைத்துள்ளார் அகத்திய மகா முனிவர்.

‘வர்ம பொன் ஊசி’ எனும் தன் ஏட்டில் குறிப்பிட்ட இவ் நோக்கு வர்ம முறை ஆனது தேரையர் சித்தர் மூலம் போகர் சித்தர் வரை பாதுகாக்கபட்டது.

பாண்டிய நாட்டில் தோன்றிய வர்மகலை ஆனது சோழ மன்னர்களாலேயே பரப்பபப்பட்டது.

ஜடா வர்மன் எனும் பாண்டிய மன்னனும், கரிகால சோழன் எனும் சோழ மன்னனும் இவ் நோக்குவர்ம கலையில் சிறந்து விளங்கியதாக குறிப்புக்கள் கூறுகின்றது.




அகதியர் அருளிய உடற் கூற்று தத்துவத்தின்படி உடலின் நரம்பு மண்டலங்களின் பிணைப்புக்களே வர்ம புள்ளிகள் ஆகவும் இவை உடலில் 108 வர்ம புள்ளிகள் காணப்படுபதாகவும் கூறப்பட்டு உள்ளது. இவ் வர்ம புள்ளிகளின் அசைவினை ஏற்படுத்துபதன் மூலம் உடலில் மாற்றங்கள் ஏற்படும்.

இதன் படி ஒருவரின் முகத்தில் 12 அதிகமான வர்ம புள்ளிகள் காணப்படுகின்றது, இவற்றின் முக்கிய புள்ளிகளை பார்வையின் வழியே இணைக்கும் போது மற்றவர்களின் ஆற்றல் கட்டுப்படுத்தபடுகின்றது.

தவவலிமையாலும், சூக்சும ரகசியதினாலும், குருவின் வழிகாட்டலின் மூலமே இவ் நோக்குவர்ம கலையின் ஆற்றலை ஒருவர் பெறமுடியும் என தென் இந்தியாவில் மதுரை நகரில் உள்ள வர்மக்கலை பயிற்சி ஆசான் உடன் நான் தொலைபேசியில் பேசும் போது கூறினார்.

பல தகவல்களினை கூறிய அவர் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் போதே பல




அனுபவங்களை பெற முடியும் எனவும் கூறினார்.

இன்றும் இந்தியாவின் மதுரை, தஞ்சை, கேரளா போன்ற இடங்களில் நடைமுறையில் உள்ளன என்பதும் பெருமை கொள்ளவேண்டிய விடயம்தான்.

இக்கலையின் ஆற்றல்களை அறிந்த மேலைதேய நாடுகளான ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் இன்றும் பேணப்பட்டு வருகின்றன.

நம் ஆதிதமிழன் கூறிய அபூர்வகலையின் பெருமையினை உலகறிய செய்வோம்.

சுவடுகளை தேடிய பயணம் தொடரும்...




ஆய்வுகளுடன்...

**நிகோஷ்**

